
www.tamilarangam.net



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
-SEINE ; FRANCE

# எரிமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வைகாசி - 1993

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

*10-02-1993*

அன்புள்ள மகனுக்கு,

நீ நலமாயிருப்பாய் என நம்புகிறேன். நானும் இருக்கிறேன். நீ போய் கனகாலமாயிற்று. கப்பல் ஒழுங்காக வராதபடியால் உனது கடிதமும் ஒழுங்காகக் கிடைக்கிறதில்லை. இங்கே சாப்பாட்டுச் சாமான்களும் அப்படித்தான். சுய உற்பத்தி என்று சொல்லி நாங்களும் குரக்கன், மரவள்ளி என்று செய்யிறபடியால் தான் சமாளிக்கிறம்.

நீ முந்தி ஓடித்திரிந்த வெறும் வளவுக்குள்ளே இப்ப நிறைய சனங்கள் வந்திருக்கினம். அவையள் மாதகலிலிருந்தும், தீவிலிருந்தும் அகதியாக வந்தவையள். இந்த மழைக்குள்ளேயும், பனிக்குள்ளேயும் மரங்களுக்கு கீழேயும், சின்னச் சின்ன கொட்டில்களிலேயும், சாக்குகளை மறைப்புக்கு கட்டிக் கொண்டு சரியாக கஸ்ரப்படுதுகள். அரசாங்கம் ஒழுங்காக சாப்பாடு அனுப்பிறதில்லை. நிவாரணம் என்று சொல்லி இங்கே குண்டுகள்தான் போடுது.

நீ சின்ன வயதில் படித்த பள்ளிக்கூடத்தின் மேலே சுப்பசோனிக் விமானக் குண்டு விழுந்து சரியான சேதம். உன்னைப் படிப்பிச்ச செல்லத்துரை மாஸ்ரருக்கு உடம்பெல்லாம் காயம். எங்கட மூத்தண்ணையின் கடைசி மகனும் இன்னும் கொஞ்சப் பொடியளும் அதில் செத்துப்போட்டுதுகள். பாவம். மூத்தண்ணை, அவனை நம்பித்தான் இருந்தவர். இதோட தன்ரை மகளைக் கொண்டுபோய் இயக்கத்தில் சேர்த்துவிட்டார். இப்படி அநியாயமாக சாகிறதைவிட வீரமாகச் சாகலாம் என்று எனக்குச் சொன்னார்.

உன்னோட படிச்ச பொடியளெல்லாம் இப்ப இங்கே இல்லை. அரைவாசிப் பேர் வெளிநாட்டுக்கு போய்விட்டார்கள். மிச்ச அரைவாசிப்பேர் துவக்குத் தூக்கப் போய்விட்டார்கள். உன்னோட ஒன்றாக ரீயூசனுக்குப் போன முரளியை ஞாபகமிருக்கோ? அவன் போன கிழமை வந்தவன். இப்ப மணலாறில் நிற்கிறானாம். ஆனையிறவு சண்டையில் காயப்பட்டு ஒரு கால் இல்லை அவனுக்கு. அப்படியும் திரும்பவும் சண்டைக்குப் போகப் போறானாம். அண்டைக்கு நல்ல மழை. இங்கே வரேக்கை முழுக்க நனைஞ்சு வந்தான். நான் நீ விட்டுப்போன ரெயின் கோட்டை அவனுக்குக் கொடுத்து விட்டன். இந்தப் பொடியள் எல்லையில் மழையிலேயும், வெய்யிலேயும் நிற்கிறபடியால்தான் இங்கே உள்ள சனங்கள் நிம்மதியாக இருக்குதுகள்.

எங்கட பக்கத்து வீட்டு அன்னமாக்காவுடைய மகன் வளலாய் சண்டையில் வீரச்சாவடைந்து விட்டான். அவனது இறுதி நிகழ்ச்சிக்கு நானும் போனனான். மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அன்றுதான் முதல் முறையாக போனனான். உன்ரை அப்பு செத்ததுக்கு கூட இப்படி நான் அழேல்லை. இதை என்னென்று எழுதுவது? வாழ வேண்டிய இந்தப் பிஞ்சு வயதுப் பிள்ளையள்.....

நீ என்னை வரச்சொல்லி எழுதியிருக்கிறாய். இறுதிவரை இந்த மண்ணில் தான் வாழுற தெண்டு முடிவெடுத்திருக்கிறன்.

எங்களுக்கு எண்டொரு நாடு வேணுமடா தம்பி!

உன்ர சுகத்தைக் கவனி.

அடுத்த கடிதத்தில் சந்திக்கும்,

அன்புடன் - அம்மா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரெண்டாம் ஆண்டு

வைகாசி 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

## இன அழிப்பு முயற்சியை தமிழினம் வீரத்துடன் எதிர்கொள்ளும்.

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையை யதார்த்த நிலைமைகளில் வைத்து ஆராயும் போது, அரசியல், இராணுவ செயல்பாடுகள், தீர்வுகள் என்பன முதனிலை வகிக்கின்றன. அரசியல் தீர்வு என்ற எண்ணமே அரசாங்கத்திடம் கிஞ்சித்தும் இல்லை என்பது தெளிவாகியுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள, வடக்கு, கிழக்கு தற்காலிக இணைப்புடனான, இந்தியாவால் திணிக்கப்பட்ட மாகாணசபைத் தீர்வைத்(?) தவிரவேறு புதிதான, மேலான தீர்வு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை; இனி எப்போதும் இருக்கப்போவதுமில்லை. எனவேதான் அரசாங்கம் வடக்குகிழக்கு மாகாண சபையைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தேர்தல்களை வைக்கின்றது. மேலும் அதிகாரங்களைக் குறைப்பதும், வடக்குகிழக்கை நிரந்தரமாகப் பிரிப்பதுமே அரசாங்கத்தின் முழு மூச்சான முயற்சியாக உள்ளன. இந்நோக்கங்களை நிறைவேற்றும் கருவியாகவே பாராளுமன்றத் தெரிவுக்குழு செயல்படுகின்றது. எனவே சிங்கள ஜனாதிபதி பிரேமதாசா, தெரிவுக்குழு கண்டுபிடிக்கும் தீர்வை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என மந்திரம்போல் ஜெபித்துக்கொண்டிருக்கிறார். தெரிவுக்குழுவிலுள்ள சிங்களப் பெரும்பான்மையின் கருத்தொருமித்த அபிப்பிராயம், தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையின் மூலம் வெளிப்பட்டுள்ளது. தெரிவுக்குழு உருவாக்கப்படும்போதே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கல் என்ற வரையறை வகுக்கப்பட்டிருந்தது. இதனை நன்கு அறிந்து கொண்டே கொழும்புத் தமிழ்க் குழுக்கள் தெரிவுக்குழுச் செயல்பாடுகளில் இதுவரை காலமும் கலந்து கொண்டன. அது மாத்திரமல்ல தீர்வுத்திட்டங்களையும் சமர்ப்பித்தன என்பது மன்னிக்க முடியாத குற்றமாகும். மேலும் சிறினிவாசன் போன்ற அடிவருடிகளினூடு அரசாங்கம் தொடர்ந்து அரசியல் சதுரங்கத்தை ஆடிக்கொண்டே உள்ளது. அதன் ஒரு அம்சமே, அரசாங்கம் சிறினிவாசன் மூலம் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதமாகும். அக்கடிதத்தில், வடக்கு கிழக்கில் நடைபெறும், அழிவுகளும், அனர்த்தங்களும் அடக்குமுறை அரசினால் அல்ல; விடுதலைக்காகப் போராடுபவர்களாலேயே என அழகாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவை, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் சந்திக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவின் வரையறையும், அது உருவாக்கிய திட்டமும், அது கொழும்புக் குழுக்களாலேயே நிராகரிக்கப்பட்ட உண்மையும் தெரிந்த பின்னர், அதனைச் சந்திப்பதால் நன்மை அடைவது அரசாங்கமே என்பது சிறினிவாசன் போன்றோருக்கு மகிழ்ச்சி அளிப்பதாய் இருக்கலாம்.

தெரிவுக்குழுவின் அடுத்த முக்கிய பயன், இராணுவ வெற்றியை எட்டும் முயற்சியில், அரசாங்கத்திற்கு ஒரு திரையாகவும், உலக அபிப்பிராயத்தை மயக்கும் மகுடியாகவும் விளங்குவதுதான். இவ்விடயத்திலும், கொழும்புத் தமிழ் குழுக்கள் அரசாங்கத்திற்கு அளப்பரிய உதவிகளைப் புரிந்துள்ளன; இன்னும் புரியவுள்ளன. இவ்வுதவி புரிதலின் ஒரு படியாக கொழும்பில் அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் இக்குழுக்கள் நடத்தும் பேச்சுவார்த்தைகள் அமைக்கின்றன. கிழக்கு மாகாணத்தை எவ்வாறு துண்டாடுவது என்பதே இப்பேச்சுவார்த்தைகளின் பொருளாக உள்ளது. திருகோணமலையையும், வடக்கு கிழக்கில் உள்ள சிங்களக் குடியேற்றப் பகுதிகளையும் சிங்கள ஆட்சியிடம் தாரைவார்த்துவிட்டு, தரைவழி இணைக்க முடியுமா எனவும், தனித்தனியாகப் பிரிந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு பொதுவான சபை மூலம் இணைக்க முடியுமா எனவும் ஆராய்ந்துள்ளார்கள். மக்கள் பலமோ, ஆயுத பலமோ, தார்மீக பலமோ இல்லாத இந்த குழுக்கள், இனவாத அரசுடன் நடத்தும் இத்தகு பேச்சுவார்த்தைகள், தமிழ் மக்களைத் தொடர்ந்து படுகுழியில் வீழ்த்தவே உதவும் என்பது இந்தச் சொரணை கெட்டவர்களுக்கு விளங்கப்போவதில்லை. இக்காட்டிக் கொடுப்பை சர்வதேச மயப்படுத்தவும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அதாவது மிக விரைவில், தாய்லாந்து நாட்டில், பாங்கொக் நகரில் இக்குழுக்களைக் கூட்டி மகாநாடு நடத்தி, தமிழர் தாயகத்தை எவ்வாறு துண்டாடுவது என்று ஆராயப்போகிறார்களாம்.

இவ்வாறு ஒரு தேசிய இனத்தை கண்டதுண்டமாக்கும் தீர்வை(?) தமிழ் மக்களும், அவர்களைத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே அவர்களையும் ஏற்றுக்கொள்ள வைக்க கைவசம் உள்ளது ஒரு இனப்படுகொலைத் திட்டமே. இத்திட்டத்திற்கு, சூறாவளி, சுமண போன்ற போர் நடவடிக்கைகளுக்கு, இராணுவ அழிப்புக்கு அரசாங்கத்தால் நடைமுறைத்தப்பட்டு வரும் பொருளாதாரத் தடையானது மெல்லப் பரவும் நச்சுப் புகையாகச் செயல்படவுள்ளது.

இவ்வின அழிப்பு முயற்சியை தமிழினம் வீரத்துடன் எதிர்கொண்டு வெற்றி பெறும் என்பது அதன் பல்லாயிரம் ஆண்டு கால நாகரிக வரலாறு உறுதியாய்த் தெரிவிக்கின்றது.

www.tamilarangam.net

# பொருளாதாரத் தடை



# இன அழிப்பின் ஒரு வடிவம்

– மதி –


எதிரியின் அடக்குமுறைப் போரில் அவன் பாவிக்கும் மிகக் கொடூரமான ஆயுதம் பொருளாதாரத் தடையாக இருக்கின்றது. மக்களின் அத்தியாவசிய பொருள்களைத் தடைசெய்து மக்களை ஓட்டாண்டிகளாக ஆக்குவது அவனது இராணுவ தந்திரோபாயத்தில் மிக முக்கியமான அம்சமாக உள்ளது. இராணுவ வெற்றிகளையும் அதன் மூலமான தீர்வினையும் காண்பதற்கு இது மிகவும் கேவலமான குறுக்கு வழியாக உள்ளது. மக்களைப் பட்டினி போட்டு பஞ்சைப் பராரிகள் ஆக்கி, நோயாளிகள் ஆக்கி, அவர்களை நடைப்பிணங்களாக்கிய பின் போரின் போக்கைத் தீர்மானிக்க எதிரி கங்கணங் கட்டுகிறான். உடல் வலிமை இழந்த மக்கள் மன வலிமை குறைந்து மண்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கிறான். மேலும், மக்களின் சுயமான பொருளாதார நடவடிக்கைகள், போக்குவரத்துக்கள் ஆகியவற்றையும் தடைசெய்து, மக்களை முழுமையாக அரசாங்கத்தின் தயவில், தங்கு நிலையில் அநாதரவாளர்களாக, அநாதைகளாக வைத்திருக்க எதிரி விரும்புகிறான். இது பொதுமக்களை ஆட்டிப்படைக்கவும் தான் விரும்பியவாறு கணக்காக பொருளாதார ஆயுதத்தை இராணுவ இலக்குக்கு பயன்படுத்தவும் உதவுகிறது. இது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒட்டுமொத்தமான, பொதுமக்களுக்கு எதிரான போர் என்பது மிக நாசூக்காகவே வெளிப்படுகின்றது. அதிலும், மிக நுணுக்கமான இனப்படுகொலை என்ற வடிவத்தையும் பெற்று படிப்படியாக ஒரு இனத்தைச் சங்கரிக்கும், அவ்வினத்தின் சந்ததியைக் கருவறுக்கும் கொடுமையையும் புரிகின்றது.

ஒரு நூறு பேரைக் கொன்றொழித்தல் என்று வெளிப்படையாக அரசாங்கம் புரியும் கொலைகளை விட இது மிக மோசமானது. ஆனால், இதன் கொடூரத்தன்மையும், சூழ்ச்சியும் நீண்டகால விளைவுகளும் மிகப் பயங்கரமாக உணரப்பட்ட போதிலும், இதற்குக் காரணமான எதிரியை அவை அப்பட்டமாக இனங்காட்டுவதில்லை. காரணம் எதிரி இக்கொடூரத்தை மறைக்க பெரும் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விடுகிறான். பொருளாதார நெருக்கடி போராட்டம் செய்பவர்களாலேயே ஏற்படுவதாக உலகுக்குக் காட்ட முனைகிறான். எனவே, பொருளாதாரத்தடை என்ற எதிரியின் ஆயுதம் குறித்து அறிதலும், அதன் ஆபத்துக்குறித்து பெரும் கண்டனம் தெரிவிப்பதும், அத்தடைகளை முறியடிக்க கடுமையாகச் செயல்படுதலும் அவசியம் ஆகின்றது.



ஒரு அரசு ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை தன்னுடையது எனக் கூறுகிற வரைக்கும், அங்கு வாழும் மக்களை தனது நாட்டின் பிரஜைகள் என்று சொல்லும் வரைக்கும் அம்மக்களின் நலன்களைப் பேணுவது அவ்வரசின் கடமையாகும். தனது குடிமக்கள் என்று கூறிக் கொண்டே, அம்மக்கள் மீது ஒட்டுமொத்தமாக போர் தொடுப்பதோ, அவர்கள் குடியிருப்புக்கள் மீது தடை விதிப்பதோ, சர்வதேச சட்டங்களுக்கும், உலக நடைமுறைக்கும், நீதிக்கும் எதிரான விடயங்களாகும். இது இனப்படுகொலை என்ற குற்றத்தை அவ்வரசாங்கத்தின் மீது சுமத்துகிறது. இனப்படுகொலை என்பது சர்வதேச வழக்கில் அதி உச்ச குற்றமாகவும், வெளியார் தலையிட்டு அதனைத்தடுப்பதற்கு உரிமையை வழங்கும் குற்றமாகவும் அமைகின்றது. 1949ம் ஆண்டு ஜெனிவாவில் உருவாக்கப்பட்ட மனிதாபிமான சட்டங்களின் கீழ் தடுக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுகின்ற மக்கள், அதிலிருந்து தப்ப, தங்களைப் பாதுகாக்கின்ற இன்னொரு அரசாங்கத்தை சட்டரீதியாக நிறுவுவதோ, அதற்கு சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதோ, சர்வதேச சட்டங்களின் கீழ் தடுக்கப்பட்ட நிலையில், அம்மக்களின் நிலை அந்தரமானதாகி விடுகின்றது. எனவே, வெளியாரின் தலையீட்டுக்கு வழிவகுக்க சந்தர்ப்பத்தை இது தோற்றுவிக்கிறது. உள்நாட்டில் ஆற்றப்படும், பொருளாதாரத் தடைக்கு எதிரான நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லாதபோது, வெளி உதவி பெறப்பட வேண்டும். அம்மக்களின் உண்மையான பாதுகாவலரான, அம்மக்களின் பிரதிநிதிகளுக்கு அங்கீகாரம் இல்லாத போது, மனிதாபிமான (Humanitarian) உதவிகளை ஆற்றுகின்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா.சபை அகதிகள் ஸ்தானிகராலய அமைப்பு போன்றவற்றிடம் தஞ்சம் அடைய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எமது நாட்டில் பல்வேறு சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் செயல்படுகின்றன. இவற்றின் செயல்பாடு, சர்வதேச சட்ட வரையறைக்குள்ளேயே அமைந்துள்ளது. சர்வதேச சட்ட வரையறையுள், பொதுமக்கள் மீதான பொருளாதாரத்தடையும், பட்டினி போட்டு அழிக்கும் இனப்படுகொலையும், பொதுமக்கள் குடியிருப்புகள் மீதான ஆகாயக் விமானக் குண்டுவீச்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும் மிக அதிஉச்ச குற்றங்கள் என ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். எனவே, இக்குற்றங்களைப் புரிபவனை உலகின் முன் இனங்காட்டுதலும், அவற்றைத் தடுத்து நிறுத்துவதும், சர்வதேச நீதி மன்றத்தின் முன் அவனைப் போர்க் குற்றவாளியாக முன்நிறுத்தலும் இச் சர்வதேச அமைப்புகளின் கடமைகள் ஆகின்றன. இனப்படுகொலைக்கு உட்பட்ட மக்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வு வழங்குதல் மட்டும் இவற்றின் கடமையாகாது. இனப்படுகொலை நிகழாமல் பாதுகாப்பது முன்னிலை கொடுக்கப்பட வேண்டிய விடயமாகும். இனப்படுகொலை நடப்பது தெரிந்திருந்த போதிலும், அவற்றைத் தடுக்க முயற்சிகள் மிக ஆணித்தரமாகச் செய்யப்பட வேண்டும். அல்லாது போனால், இனப்படுகொலைக்கு உடந்தையான பழிச் சொல்லுக்கு உள்ளாக நேரிடும்.

அரசாங்கம் வடபகுதிக்கு மேற்கொள்ளும் உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை மேற்பார்வை செய்வதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே ஆற்றுகின்றது. மேலும், சிறிலங்கா அரசின் இராணுவ அட்டூழியங்களுக்கு உள்ளாகி அகதிகளாய் அகதி முகாம்களில் இருப்போரின் நலன்கள் குறித்து அக்கறை செலுத்த வேண்டியதாய் ஐ.நா.சபையின் அகதிகள் அமைப்பு உள்ளது. எனவே பொருளாதாரத்தடைக்கும், அரச பயங்கரவாதத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கைகளுக்குத் துணையாக இச்சர்வதேச அமைப்புகளே செயல்ப்பட வேண்டும்.

சிறிலங்கா அரசாங்கம் இப்பொருளாதார இனப்படுகொலையை எவ்வாறு செய்கின்றது. முதலில், இராணுவப் பயங்கரவாதத்தின் மூலம், மக்களைத் தமது சொந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தி, அகதிகள் ஆக்குகின்றது. பின்னர் தங்குநிலையில் உள்ள அகதிகளுக்கு அளிக்க உறுதி செய்த நிவாரணங்களை கொடுக்காது விடுதலோ, குறைத்துக் கொடுத்தலோ, காலதாமதாய்க் கொடுத்தல் மூலமோ மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக பிச்சைக்கார நிலைக்குக் கொண்டு செல்கின்றது. இது அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடைபெறுவதாகும்.

அரசாங்கம் பொருளாதார ஆயுதத்தை மிக மூர்க்கமாகப் பயன்படுத்த விரும்புவது யாழ். குடாநாட்டிலாகும். இச்சிறிய பகுதியிலேயே 8இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் நெருங்கி வாழ்கிறார்கள். இதனை நடைமுறைப்படுத்த பல முன்னெடுப்புகளை அரசாங்கம் திட்டமிட்டுச் செய்து வருகின்றது.

ஆனையிறவு முகாம் விஸ்தரிப்பு, சங்குப்பிட்டிப் பாதையில் முகாமிட்டது ஆகியவை ஆரம்ப நடவடிக்கைகளாகும். கிளாலிக்கடல் ஏரியை தடை செய்யப்பட்ட பிரதேசமாக்கியது அண்மைக்கால நடவடிக்கையாகும். குடாநாட்டைச் சுற்றிவளைத்து அதன் கழுத்தை நெரித்து, பொருளாதாரத் தடையை இறுக்குதல் அரசின் நோக்கமாகும். மேலும் குடாநாட்டில் உள்ள வாகனப் போக்குவரத்தையும், பொருள் விநியோகத்தையும் கடந்த தை மாதத்திலிந்து தடை செய்துள்ளது. மேலும் தாண்டிக்குளம் தடைமுகாம், கிளாலிக் கடலேரியைத் தடைப்பிரதேசமாக்கியமை ஆகியவற்றின் மூலம் பொதுமக்கள் பொருட்களை குடாநாட்டிற்குள் கொண்டு வருதலும் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது.



அண்மையில், விடுதலைப் புலிகள், ஐ.நா.சபை அகதிகள் ஸ்தானிகராலயத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அத்தியாவசியப் பொருட்களை அவ்வமைப்பின் கண்காணிப்பின் கீழ் குடாநாட்டுக்குள் கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வரவும், சங்குப்பிட்டிப் பாதையைத் திறக்கவும் இணக்கம் காணப்பட்டதாயினும் அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வருகின்றது. எனவே குமாரி, குமண கப்பல்கள் வழியாக மட்டும் அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் குடாநாட்டு மக்களின் பொருளாதார முழுமையையும் இக்கப்பல் விநியோகத்தில் தங்க வைக்க அரசாங்கம் முனைகிறது. இக்கப்பல்கள் மூலம் தடுக்கப்படாத அத்தியாவசியப் பொருட்களில் 1/3 பங்கே குடாநாட்டிற்குள் கொண்டு வரப்படுகின்றது என்பது மிகப் பயங்கரமான விடயமாகும். சகல பொருள் போக்குவரத்துக்களும் தடைப்பட்ட நிலையில் 1/3 பங்கு உணவுப் பொருளிலேயே மக்கள் உயிர் வாழ வேண்டும் என்பது, மக்களை அரைகுறை மனிதர்களாக்கும், கொஞ்சம் கொஞ்சமாக உயிர் குடிக்கும் விடயமாகும். ஒரு மாதத்துக்கு ஆகக்குறைந்தது 13.5 மெற்றிக் தொன் உணவுப் பொருள் குடாநாட்டுக்குத் தேவைப்படுகின்றது. ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மேற்பார்வையில் வரும் இரு கப்பல்களில் கொண்டு வரப்படுவதோ 4.2 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களாகும். இவ்வாறு கொண்டு வரப்படும் உணவுப் பொருட்களில் பெரும்பகுதி அரச அதிகாரிகளால் கொள்ளையடிக்கப்படுகின்றது. இதற்கான விசாரணையை அரசாங்கம் செய்துள்ள போதிலும், இக் கொள்ளையை அரச உயர்பீடம் திட்டமிட்டுச் செய்வதாகவே கருத இடமுண்டு. இவ்வளவு குறைபாடு காரணமாக மக்கள் அரைகுறை உணவையும், ஒரு நேர உணவையுமே உண்ண நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பல சந்தர்ப்பங்களில் நோய் வரக்கூடிய உதவாத உணவுகளும் அனுப்பப்பட்டுள்ளன. உணவுப்பற்றாக்குறை, மருந்துப் பற்றாக்குறை என்பவற்றின் காரணமாக பல்வேறு தரத்தில் இறப்பவர்கள் பற்றிய புள்ளிவிபரம் அதிர்ச்சியைத் தருவதாக உள்ளது. வடபகுதியில், உணவு, மருந்துக்குறைவினால், ஒவ்வொரு நாளும் 15 பேர்வரை உயிரிழப்பதாக புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. கடந்த 7 மாதங்களில் 905 குழந்தைகள் மருந்துகள் இல்லாத காரணத்தினால் உயிரிழந்துள்ளன. 400 சிசுக்கள் பிறந்தவுடன், தாய்க்கு ஊட்டம் இல்லாத காரணத்தினால் இறந்துள்ளன. இத்தடையை, இனப்படுகொலையைத் தடுப்பதற்கு, பொருளாதாரத் தடையை முறியடிப்பதற்கு தாயகத்தில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டும் போதாது. வெளிநாட்டில் உள்ள எம்மக்கள் இது குறித்து கூக்குரல் கொடுக்க வேண்டும். மனிதாபிமான, மனித உரிமை நிறுவனங்களுக்கு ஆபத்தான நிலைமையை தெரியப்படுத்தல் வேண்டும். தமது எதிர்ப்பை அமைதியான, சட்டரீதியான வழிகள் மூலம் வெளிப்படுத்தல் வேண்டும். இங்கு செயல்புரியும் சர்வதேச அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். சிறிலங்கா அரசின் இனப்படுகொலையை சர்வதேச சமூகத்தின் முன்னர் பல்வகை வழிகள் மூலம் அம்பலப்படுத்துவதினூடாகவே எமது மக்கள் ஒரு இனஅழிவிலிருந்து தப்பிப் பிழைக்க முடியும். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் பயணம்

போர் செய்யும்
எம் பூமி
எம் இனியவள்
தாயின் உயிர் காக்கும்
உன்னதப் போர்

மண்ணின் புதல்வர்
நடக்கும் போர்ப்பயணம்
அன்பின் வழி வழித் தொடரும்
ஆத்ம பயணம்

மூடும் துயரிழைப் போர்வை
கிழித்தங்கு முளைவிடும்
வீரத்தின் விளை நிலங்கள்

சாவை வெல்லும் அந்தப்
போர்ப்பயணம் மண்ணின் உயிர் மூச்சு
தன்னலமற்ற அன்பின் ஊற்றே
இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கம்

ஏற்றிய ஒளியை
கண்ணீரும் செந்நீரும் சிந்தி
காக்கும் அவர்கள்
எம் இதயம் போற்றும்
இன் அரும் சோதிச் சுடர்காண்


அன்பால் உருகி
இறுகப் பாதை விரிகிறது
விடுதலைப் பயணம் தொடர்கின்றது

விழிநீர் திரை மூடுகின்ற துயர்கலையும்
பொழுதுக்காய்
நாம் காத்திருத்தல் ஆகாதே

எண்ணிலாக் கடமைகள்
எமக்குள
மண்ணிலுள மானுடர்
யாவரும் வருக
காதல் வயப்படும்
மனம் கொண்டவர் வருக

பொழுது போகுமுன்
துயரை வெல்லும் இந்த
விடுதலைப் பயணம்
போய்முடித்தாக வேண்டும்.

- சுபா -



எங்கள் தம்பியே ஈழத்தின்
இளங்காலைப் பொழுதே வீரம்
பொங்கு மோர்புற நானூற்றின்
புதுப்பாட்டே புவிப்பந் தின்மேல்
மங்குல் உடுக்கள் உள்ள நாளும்
மறையாத புகழே சேர்த்தாய்
கங்குல் கிழித்த செம்பருதி
கரிகாலன் மரபே வாழி

நின்றன் பிறந்த நாளிது
நீடுதுயில் களைந்த நாளிது
தென்றல் சுமந்து வந்ததோர்
செய்தி பொங்கு தமிழர் வீரமே
குன்றம் நிகர்நின் தோள்குடி
கொண்டிருக்க விளையும் போர்க்களம்
வெற்றிமுரசு கொட்டியே
மீட்டெடுக்குந் தமிழீழத்தினை

தென்றலே யிங்குநீ வந்தனை
தீந்தமிழ் நாட்டினில் வாழ்ந்திடும்
மன்றமேற் நற்கவி வாணனும்
வந்தனை செய்துனை வாழ்த்தினேன்
தொன்றுபோ லின்றிலை துய்தமிழ்
நாட்டினர் நாய்களே தம்பிபால்
சென்றுநீ சொல்லுக இங்கிருந்
தேகிடின் வாடையென் பாருனை

புலவர் க. முருகேசன்

திருச்சி.

www.tamilarangam.net

# கதை – கவிதை – கண்ணீர்

"ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறைதான் ஒரு கவிஞன் பிறக்கின்றான்" என்றார் ஓர் அறிஞன். இக்கூற்றை முழுமையாக ஏற்பதானால் பாரதிக்குப் பிறகு ஒரு பாரதிதாசன் தோன்றியிருக்க முடியாது நல்ல கவிஞன் எப்பொழுது பிறப்பான் அவன் பிறப்பதற்கு நேரம் காலம் கிடையாது. ஆனால் ஆயிரம்பேர் கவிதை எழுதினால் தான் ஐந்தாறுபேராவது கவிஞர்களாகத் தேறுவார்கள். இன்று சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம் எழுதுபவர்களை விட கவிதை எழுதுபவர்களுடைய தொகையே அதிகம். இவர்களுட் பெரும்பாலானவர்கள் கவிதை பற்றிய உருவகம், உள்ளடக்கம், எண்ணக்கரு என்பன பற்றிய சிந்தனையின்றியே எழுதித் தள்ளுகிறார்கள். காரணம் கவிதை என்றால் எப்படியும் எழுதலாம் என்ற எண்ணமாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகின்றது.

இன்று கவிதை எழுதி வருபவர்களுள் தனக்கென ஒரு பாணியை அமைத்து வருபவர் நாவண்ணன், இவர் எழுதிய "தீபங்கள் எரிகின்றன" எனும் நூலை வாசித்து உள்ளம் நெகிழாதவர்களே இல்லையெனலாம். அவர் இப்பொழுது ஈழத்து மலைநாட்டு மக்களுடைய அவல நிலையைச் சித்தரித்து "கதை கவிதை கண்ணீர்" எனும் நூலைத் தந்துள்ளார்.

இவருக்கு முன்னரே பலர் மலைநாட்டை மையமாகக் கொண்டு சிறுகதை, நாவல், கவிதை என்பன புனைந்துள்ளனர். டாக்டர் நந்தியின் மலைக் கொழுந்து (நாவல்) பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் (நாவல்) சி.வி. வேலுப்பிள்ளையின் தேயிலைத்தேட்டத்திலே (கவிதை) என்பன குறிப்பிடத் தக்கன. கவிஞர் நாவண்ணன் மலைநாட்டிலே வாழ்ந்தவர் அங்கே உள்ள மக்களது வாழ்க்கை நிலையை நன்கு அறிந்தவர். அவர்களுடைய இன்ப துன்பங்களில் கலந்து கொண்டவர் அந்த அனுபவங்களைக் கொண்டு இந்நூலை யாத்துள்ளார்.




**கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை**
**கவிதை நூல் ஓர் ஆய்வு**

நூலின் ஆரம்பத்தில் இவர் பொதுவாக தமிழ்ச் சாதியைப் பற்றிக் கூறும்போது! இச்சாதியின் தனித்துவம் எங்கேயிருக்கிறதெனக் கேலியும் கிண்டலுமாக ஆனால் ஆத்திரத்துடன் கூறுமிடம் சிந்தனைக்குரியது; நயத்துக்குரியது; அது வருமாறு.

"இற்றைவரை இச்சாதி
இல்லா நாடு
இருக்கிறது என்று சொலின்
எவரும் நம்பார்
கற்றரையில் மட்டு மல்ல
வாய்ப்பு வந்தால்
சகளத்தில் கூட இவர் களனி
செய்வார்"

மலையக மக்களுடைய கண்ணர்க் கதையை கூறுமிவர் இவர்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர் எத்தகைய துன்பங்களுக்குக் கூடாக காடுகளை வெட்டிப் பெருந்தோட்டங்களையாக்கினர்? இவ்வாறு செல்வங்கொழிக்கும் நாட்டை உருவாக்கித் தந்த இவர்களுக்குக் கிடைத்த பரிசென்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்ணீரேதான், இவ்வாறு கூறிச் செல்கிறது இவருடைய நூல்.

இந்தியாவிலிருந்து வரும் போது:

"கொள்ளை நோய் பல
பேரைக் கொன்றழித்தது "
"கொள்ளி விசக் காய்ச்சல்
குலமழிக்க"

"பிள்ளை தாயோடு புருசர் எல்லாம் செல்லும் வழியெல்லாம் செத்து வீழ்ந்தனர்".

"செத்தழிய வீழ்ந்தோரின் பக்கம் தன்னில் சிரட்டையுடன் நீர் வைத்து" சென்றனர்

"சுற்றிவர ஓநாய்கள் நரிகள் சூழும் சுதந்திமாய் அவனுடலை மேயும் மெல்லும்"

இத்தகைய கவிதை வரிகள் உள்ளத்தைத் தொடுகின்றன. தேயிலைத் தோட்டத்திலே பன்னிரண்டு அடி நீளமும் பத்தடி அகலமும் கொண்ட இருட்டறைகளில் தாய் தந்தை பிள்ளைகுட்டி மருமகன் மருமகள் என எல்லோரும் ஒன்றாகவே வாழும் இவர்களுக்கு

"மலசல கூடம் இல்லை
மருத்துவ வசதியில்லை
கலை கலாச்சாரம் இல்லை
கல்வியோ துளியு மில்லை"
என இரங்குகின்றார்.

தேயிலைத் தோட்டங்களில் துரையை விடக் கொடியவன் கங்காணி இவன் அந்நியன் அல்லன். இவனும் ஒரு தமிழன் தான். இவனுடைய கொடுமைகளை கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்.

"கொழுந்து நிறுக்கையிலே கள்ள நிறை சொல்வான் யாரும் எழுந்து வினாத் தொடுக்கில் எமனாகிக் கொல்வான்"

''வெள்ளைத் துரைக்கு வேண்டிய பெண்ணை வெருட்டி மிரட்டி விருப்ப மூட்டியும் கள்ளப் பெண்டாய்க் கற்பை விற்கவும் காசுக்காய் இக்கயவன் செய்வான்"

குட்டக்குட்டக் குனிந்த மக்கள் பின்னர் விழித்தெழுந்தனர். "ஆக்கவும் அழிக்கவும் ஆளுவோரை முடி நீக்கவும் நிறுத்தவும் வலிமை பெற்றார்" தொழிற்சங்கங்கள் எழுந்தன போராட்டங்கள் இடம்பெற்றன இதனால் கோவிந்தன் முதல் ஜெயமணி ஈறாகப் பல தியாகிகள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து வன்செயல்கள் உருவாகின அப்பொழுது சிங்கஎளக் காடையர்கள்

"உடைத்தார் கடை எடுத்
தார் திறை"
"பழித்தார் தலை மழித்தார்
ஐயோ
கிழித்தார் வயிறதையே....."
"கண்ணை நிகர் கற்பை
கணவன்முன் சுவைத்தனரே"
"கோலையாளதைக் கலையாகவே
புலையோர் புரிந்தனரே...."
என உள்ளம் குமுறுகின்னார்.

மலையகத்தில் ஏற்பட்ட வன்செயலால் இடம்பெயர்ந்து அகதிகளாக வந்த தமிழ் மக்களை வடக்கும் கிழக்கும் அன்புடன் வாரிவந்து ஆதரித்தன.

"இனத்தார் நம் சனத்தார் நல்
மனத்தால் நம் தமிழர்
எனத்தான் அவர் நினைத்தார் உடன்
அணைத்தார் வட கிழக்கார்"

எனக் கவிஞர் கூறுமிடம் வரலாற்று முக்கியம் பெற்றதாகும்.

இறுதியாக தமிழர்கள் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட்டால் இலட்சியங்களை வென்றெடுக்கலாம் எனக் கூறிக் கவிஞர் நூலை நிறைவு செய்கின்றார்.

இதுவரை வந்த கவிதை நூல்களுள் இது தனித்துவமானது கவிதை நூலாக மட்டுமன்றி மலைநாட்டு மக்களுடைய வரலாற்றை ஓரளவு கூறும் ஆவணமாகவும் கொள்ளக்கூடியது நாவண்ணனுடைய நல்ல பணிகளுள் இதுவுமொன்று. ■



'என்.எஸ்.ஏ', 'தடா' என்று ஏராளமாய் அடக்குமுறைச் சட்டங்களின் அணிவகுப்பு. எண்ணற்ற தமிழர் இருட்டுச் சிறைகளில்! வழக்கு நடத்திட நிதி திரட்டுகின்றோம். வாரி வழங்குவீர் எந்தமிழ் மக்களே!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கிளாலிக் கடலில் தமிழனின் ஓலம்
கேட்டதுவோ வுனக்கு
எழில் நிலவே.. முன்னர்
கொலைவெறி நரிகள் குவித்தன உடலம்
கொக்கட்டிச் சோலைநீ
குமுறலையா இந்த
நிலையது இராட்சத நெறியாள்கை
நித்திலம் எமதுயிர்
நீள்கொலையா சதி
வலையது சிங்கள வல்லாண்மை
வஞ்சனைப் பேய்வசம் எம்
வாரிசுகளா...?

# ஒரு துயரின் தூது...

நிலவே... நிலவே... நில்லொரு.. சேதி
நேற்று உன்வானம் என்
நிலத்திடையா...? எழும்
அலைகடல் விம்மி அழுதிடத் துயரம்
ஆர்த்த தென்பூமி நீ
அறிந்தனையோ? கொடும்
கொலைதரு மசூரக் குண்டுகள் தீயில்
குளற மானிடம்
குவிமலையா...? அந்த
எரிமலையான எந்தனின் தேசம்
எழும்புகை வான் உன்னை
இருட்டியதா...?

செல்லுக... செல்லுக... என்நிலம்... நிலவே
செப்புக... என்னுரை...
தேசத்துக் காற்றில் கொடும்
கொல்தொரு சிங்கள அரக்கர்தம் வாள்கள்
குருதியின் குளிப்பைக்
கொண்டது தேசம் இவன்
சொல்லுகள் இன்றிய சிலையாய் சமைந்தனன்
சிந்தனை விழிகங்கைச்
சில்லுகள் ஆனேன் துயர்
எல்லைகள் இமயம் அவலங்கள் சுமைகள்
இனம்படு இன்னலில்... என்னை...
இழந்தேன் இயம்பு!

**புதிய பாரதி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “தலைவரின் வழிகாட்டலினால் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்”



**தமிழீழப் பெண்கள் குறித்து ஜெயா**

“இன்றைய உலகிலே வாழுகின்ற மக்கள் மத்தியிலே குறிப்பாக பெண்கள் மத்தியிலே தமிழீழப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள் என்றால் இன்றைய எமது இந்த விடுதலைப் போராட்டத்தில் எங்கள் தேசியத்தலைவர், எங்களுடைய தாயகத் தலைவர், எம்மின மக்கள் தலைவர் திரு. வே. பிரபாகரனுடைய வழிநடத்தலும் வழிகாட்டலுமே என்பதை நாம் பெருமையுடன் நினைவு கூரவேண்டும்.” என பங்குனி மாதம் 8ம் திகதி நடைபெற்ற அனைத்துலக மகளிர் தின பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: “இன்று இந்த மண்ணிலே நாங்கள் சுதந்திரமாக நடமாடுகின்றோம் என்றால் பெண்கள் சமத்துவமாகவும் தங்களுடைய கௌரவத்துடனும் வாழ வழி அமைக்கப்பட்டிருக்கின்றது என்றால் அது எங்கள் தலைவரின் வழிகாட்டலாலேயே என்பதை எமது நெஞ்சங்களில் ஆழப்பதித்துக் கொள்ள வேண்டும்”.

“காட்டிலும் மேட்டிலும் நின்று கண்விழித்திருந்து களமாடி நிற்கின்ற வீரமும், தியாகமும் இங்கே தமிழீழப் பெண்களுக்கு நிறைய வந்திருக்கின்றது. இந்த மண்ணிலே வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணும் தங்களது உள்ளத்திலே இந்த வீரத்தையும், தியாகத்தையும் வளர்ப்பதற்கான ஒரு பெரிய தளம் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. இன்று பெண்கள் மத்தியிலே தலைதூக்கியிருக்கின்ற சீதனப் பிரச்சினை, வேலைவாய்ப்புப் பிரச்சினை இதனால் ஏற்படுகின்ற சம்பள வேறுபாட்டுப் பிரச்சினை என்பன இன்று நாம் எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய பிரச்சினைகளாக இருக்கின்றன.”

“எல்லாவற்றிற்கும் மேலாக இன்று பெண்களுக்கு ஏற்படுகின்ற பாலியல் துன்புறுத்தல் என்பதும் பாலியல் தொந்தரவுகள் என்பதும் பெண்களை மனிதப்பிறவிகளாக மதிக்கின்ற அந்த உயர் நிலையை இங்கே தாழ்த்திவிட்டுள்ளன. இவை எல்லாம் எமது மண்ணிலே இருந்து அறவே ஒழிய வேண்டுமாயின் நாம் அனைவரும் இணைந்து போராட முன்வர வேண்டும்.

இன்று இந்த அனைத்துலகப் பெண்கள் நாளிலே நாம் அனைவரும் ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்வோம். இந்த மண்ணிலே இருக்கின்ற பேதங்கள் மறைய வேண்டும். பெண் சமத்துவம் நிலவ வேண்டும், எந்த இடத்திலும் பெண்களுக்கு எதிராகக் காட்டப்படுகின்ற பாரபட்சங்களை அறவே ஒழிப்போம். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

இந்த வருடத்தைய எமது பிரகடனமாக, எதிர்காலத்திலே நாம் எமது வேலைத்திட்டமாக இதை எடுத்துக் கொள்வோம். இதற்கு அனைத்துத் தமிழீழ மக்களும் ஒன்றிணைந்து எழுச்சியுடன் இணைந்து போராட முன்வரவேண்டும் என்றார்.”

* * *

www.tamilarangam.net


# கிட்டண்ணாவிற்கு மக்களின் இதய அஞ்சலி

அனைத்துலகக் கடற்பரப்பில் இந்தியக் கடற்படையால் கைதுசெய்ய முற்பட்டபோது கப்பலைத் தகர்த்து வீரமரணமடைந்த கிட்டண்ணாவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் இழப்பின் துயரால் தவித்தனர் மக்கள்.

கிட்டண்ணாவின் உருவப் படங்களை வைத்து மலர் சாற்றி அஞ்சலித்தனர். இந்தியப் பிரதமர் நரசிம்மராவினதும் ஜெயலலிதாவினதும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்ட காட்சிகளையே புகைப்படங்களில் காண்கிறீர்கள்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென் தமிழீழத்தில்
# தமிழ் இன அழிப்பு



மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்வு சிங்களப்படைகளால் அவலம் நிறைந்ததாகவே இருக்கின்றது. இங்கே சிங்கள இராணுவத்துடன் ரெலோ தேசத்துரோகிகளும், முஸ்லிம் ஊர்காவல்படையினரும், சிங்களக் குடியேற்றவாசிகளும் சேர்ந்து தமிழ் மக்களை வாட்டி வருகின்றனர்.

கேட்பவர்களின் மனதை உலுக்குமளவிற்கு ஒரு கொடூரமான இராணுவ ஆட்சி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக இளைஞர்களும், யுவதிகளும் பொது வாழ்க்கையை வாழமுடியாத சூழ்நிலையே அங்கு உள்ளது. பெற்றோர்கள், வளர்ந்த பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்க முடியாத நிலை. 13, 14 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் ஒவ்வொருநாளும் சாவை எதிர்பார்த்தே வாழ்ந்து வருகின்றார்கள். சிங்களப்படைகள் செய்யும் பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள், படுகொலைகள், அவமானப்படுத்தல், தொந்தரவு செய்தல், பட்டினிபோடல் என்பனதான் மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் அன்றாடம் சந்திக்கும் அவலங்களாகும்.

இங்கேயெல்லாம் தமிழர்கள் தங்களது நிலங்களில் பயிர் செய்ய முடியாது; பிள்ளைகளைப் பாதுகாப்பாக அனுப்ப முடியாது; தமது குடும்பத்திற்குத் தேவையான உணவைச் சேமிக்க முடியாது. அதற்கெல்லாம் இராணுவத்திடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

இரவுகளிலெல்லாம் படையினரதும், ரெலோ தேசத்துரோகிகளினதும் கொடூர, மனிதாபிமானமற்ற ஆட்சியே நடக்கும். வீடுகளுக்குள் திடுதிடுப்பென நுழைவதும், கைது செய்வதும், பின்னர் அவர்களைக் கொலை செய்து வீதிகளில் போடுவதும் ஆற்றுக்குள் எறிவதும், அன்றாட நிகழ்ச்சிகள். பெண்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் மிருகத்தனமும், இரக்கமற்ற தன்மையும்தான் கோலோச்சுகின்றன. இளம் பெண்களைக் கடத்திச் செல்வதும் ஏதாவது ஒருகுற்றச் சாட்டைச் சுமத்திக் கைது செய்வதும் பின்னர் அவர்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி, படுகொலை செய்து பிணங்களைப் பகிரங்கமாகவே போடுவதும், ஒரு சாதாரண நிகழ்ச்சி.

வெளிமாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளுக்கு வேலைவிடயமாகச் சென்று, சிலநாட்கள் தங்கி வருபவர்கள், இந்தக் கொடூரமான, அவலமான வாழ்வைக் கண்டு அதிர்ச்சி அடைகின்றனர். இப்படியும் இரக்கமற்ற முறையில் வெறித்தனங்கள் நிகழ்கின்றனவா என ஆச்சரியப்படுகின்றனர்.

1990ஆம் ஆண்டு யூன் மாதம் சிங்களப்படைகளுடன் போர் ஆரம்பமாகியபின், இதுவரை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மட்டும் சுமார் எண்ணாயிரம் (8,000) தமிழர்கள், சிங்களப்படைகளினாலும், முஸ்லிம் ஊராகாவல்படையினராலும், தேசத்துரோகிகளினாலும் படு கொலை செய்யப்பட்டு விட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இதுவரை எவராலும் கண்டுகொள்ள முடியவில்லை. மட்டக்களப்பு பகுதியில் இயங்கும் சர்வதேச மனிதாபிமான நிறுவனங்களால் கூட, இவற்றுக்கு விடைகாண முடியவில்லை. ஏறக்குறைய இம்மாவட்டத்தில் வாழும் முழுத்தமிழரினதும் சொத்துக்கள் அழிக்கப்பட்டு விட்டன. இங்கே வாழும் ஒவ்வொரு குடும்பத்தின் பின்னாலும், மனதை உருக்க வைக்கும் ஒரு சோகக்கதை நிச்சயமாக இருக்கும். அநேகமாக எல்லாக் குடும்பங்களும் தமது அங்கத்தவர்கள் ஒருவரையாவது இழந்தே உள்ளன. அதிலும் அக்குடும்ப அங்கத்தவர்களின் கண் எதிரிலேயே அவ்வுயிர் பிடுங்கப்பட்டிருக்கும்.

சிங்கள ஆயுதப்படைகளுடன் சேர்ந்து ரெலோ மற்றும் ஈ.பி.டி.பி. குழுக்களும் அரக்கத்தனம் புரிகின்றன.

இராணுவத்திற்குத் தகவல்களை வழங்குவதும், தமிழ் இழைஞர்கள், யுவதிகளைக் காட்டிக் கொடுப்பதும், சுற்றிவளைப்புக்களுக்குப் பாதை காட்டுவதும், கைது செய்ய உதவுவதும், இராணுவத்துடன் சேர்ந்து தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவதும், தமிழர்களையே கோரமாகக் கொல்வதும்தான் இத்துரோகக் கும்பல்களின் வேலைகள்.

இத்துடன், 'குளக்கொட்டி' (பச்சைப் புலிகள்) என்ற பெயரில், சிங்கள அரசு ஒரு கொலைகாரக் குழுவை மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் நிறுத்தி வைத்துள்ளது. இக்கொலைகாரப் படைதான், 88, 89 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் ஜே. வி. பி. இனை அடக்குவது என்ற போர்வையில், பல்லாயிரம் சிங்கள இளைஞர்களை ஈவு இரக்கம் இன்றிக் கொடூரமான வழிமுறைகளில் கொன்று குவித்தது. இதனது ரயர் போட்டுக் கொளுத்தும் முறை, உலகப் பிரசித்தமான ஒரு விடயம்.

தமது சொந்த இனத்தவர்களான சிங்களவர்களையே கொன்று குவித்த இக் கொலைப்படை, தமிழ் இளைஞர்களை, இளம் பெண்களை எப்படி வதைக்கும், எந்த வழிமுறைகளில் கொலை செய்யும் என்பதைச் சொல்லிவிளக்கத் தேவையில்லை. இக்கொலைப் படையின் நோக்கம் தமிழ் இளைஞர்களை, இளம் பெண்களைக் கொன்று குவிப்பதுதான். இதற்குரிய சாட்டுக் களை அவ்வப்போது அது தேடிக்கொள்ளும்.


இரவு வேளைகளில் சாதாரண உடைகளுடன் திடீரென வீடுகளுக்குள் நுளையும் இவர்கள், விளக்கை அணைத்து விட்டு, வாய்க்குள் துணியைத் திணித்து இளவயதுக்காரர்களை இழுத்துச் செல்வர்; சிலவேளைகளில், சிறுவர் சிறுமிகளுடன் வயதுபோனவர்களும் இக்கொலைப்படையினால் கூட்டிச் செல்லப்படுவர். அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்கள் திரும்பி வருவது என்பது வெகு அபூர்வம். அவர்களைக் கொன்று விட்டு எரித்தோ அல்லது முகத்தைச் சிதைத்தோ அடையாளம் தெரியாமல் செய்த பின், உடலை வீதியிலோ வயல்களிலோ அல்லது ஆற்றுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குள்ளோ எறிந்துவிடுவர். கொல்லப்பட்டவர்களின் தலைகள், அநேகமாகத் துண்டிக்கப்பட்டிருக்கும்; வெறும் முண்டம் மட்டும் வீசி எறியப்பட்டிருக்கும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களிடம் 'வி' வெட்டு என்ற சொல் பழக்கத்தில் உள்ளது. ஆங்கில எழுத்தான V வடிவில் கழுத்து



வெட்டப்படுவதையே இது குறிக்கின்றது. 'வெற்றி' (Victory) என கொலைப்படை அதற்கு அர்த்தம் கற்பிக்கின்றது.

'அத்துடன் மோட்டார் சைக்கிள் குறூப்' என்று ஒரு பிரிவினர் திகிலை ஏற்படுத்தியபடி, படுகொலைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் மோட்டார் சைக்கிள்களிலேயே ரோந்து வருவர்.

'குளக்கொட்டி' என அழைக்கப்படும் பச்சைப் புலிகளைப் போல இவர்களும் ஒரு தனிக் குழுவாக இயங்குகின்றனர். ஒரு மோட்டார் சைக்கிளில் ஆயுத பாணிகளான இரு படையினர் வீதம், 10 அல்லது 15 மோட்டார் சைக்கிள்களில், ஒரு ஊரினுள் சகல பாதைகள் ஊடாகவும் ஒரே நேரத்தில் ஊடுருவுவர். படையினரின் இந்தத் திகில் விஜயம் மக்களை குலை நடுங்கச் செய்யும். இத்தகைய திகில் விஜயங்கள் இரவிலும் நடக்கும்.

வெளிவாசலூடு உட்புகும் மோட்டார் சைக்கிளில் இருந்து வீட்டுக் கதவை நோக்கி வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி, 'அக்சிலேட்டரை' முறுக்கி மக்களைத் திகிலடையச் செய்வர். கைது செய்து கொண்டு செல்லும் வழக்கம் இந்தக்குழுவிடம் இல்லை. அவர்களின் கண்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தவர்களை அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்றுவிட்டு, உடலையும் அங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

இவைதவிர கிராமச் சுற்றிவளைப்பு என்பது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஒரு அன்றாட நடைமுறை. நூற்றுக்கணக்கில் படையினர், ரெலோ தேசத்துரோகிகள் மற்றும் முஸ்லீம் ஊர்காவற்படையினர் உதவிகளுடன் ஒரு கிராமத்தைச் சுற்றிவளைத்து, 12,13வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் மற்றும் அவர்களுடைய கண்களை உறுத்தும் நடுத்தர வயதுக்காரர்களைக் கைதுசெய்து, முகாமுக்குக் கூட்டிச்செல்வர்; அவர்களைப் புலிகள் என்று கூறிச் சித்திரவதை செய்வார்கள்.

தலைகீழாகத் தொங்கவிட்டு கொட்டன்களால் தாக்கி, செத்தல் மிளகாயை நெருப்பில் இட்டு அப்புகையை சுவாசிக்கச் செய்வதும், பொலித்தீனை, றெஜிபோமை உருக்கி முதுகில் ஊற்றுவதும், சிகரெட்டால் உடலின் மென்மையான பகுதிகளில் சூடு போடுவதும், கை, கால் விரல்களைத் துணியால் சுற்றி அதன் மேல் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்துவதும், நீர்த்தொட்டிகளுள் அமுக்கி மூச்சுத் திணற வைப்பதும், அவர்களின் சித்திரவதை வடிவங்களில் சில.

கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களுள் சிலர் விடுவிக்கப்படுவர். அப்படியானவர்கள் ஏதாவது ஒரு சித்திரவதை அடையாளத்தைச் சுமந்தபடியே நடைப்பிணமாக வாழ்கின்றனர் என அப்பகுதி மக்கள் வேதனையுடன் கூறுகின்றனர். இன்னொரு பகுதியினர் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கொழும்புக்கு, சிறைச்சாலைகளுக்கெனஅனுப்பி வைக்கப்படுகின்றனர். ஆனால், கைதுசெய்யப்படுபவர்களில் அரைப்பங்கிற்கும் மேற்பட்டவர்கள் வீடுகளுக்குத் திரும்புவதே இல்லை; இவர்கள் கொல்லப்பட்டு விடுவார்கள்.

கைதுசெய்யப்பட்ட தமது மகன் அல்லது மகள் அல்லது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணவன் எங்கே எனக் கேட்க, படைமுகாம்களுக்கு கண்ணீரும் கம்பலையுமாகச் செல்லும் பெற்றோர்களுக்குக் கிடைக்கும் பதில், "விடுவிக்கப்பட்டு விட்டார்" அல்லது "அவரை நாங்கள் கைது செய்ய வில்லை" என்பதுதான். சிலவேளைகளில் கைது செய்யப்படுபவர்களின் விடுதலைக்காக பெருந்தொகைப்பணம் கப்பமாகக் கேட்கப்படுவதும் நடைபெறுவதுண்டு.

மட்டக்களப்பு வாவியில் மட்டு, அம்பாறை மாவட்டத்தில் ஓடும் ஆறுகளில், சிற்றோடைகளில் தமிழர்களது பிணங்கள் மிதந்து செல்லாத நாள் மிகக் குறைவாகவே இருக்கும். சாக்கால் சுற்றப்பட்ட நிலையிலும், சித்திரவதைக் காயங்களுடன் முழு நிர்வாண நிலையிலும் ஆண், பெண்களின் பிணங்கள் மிதந்து செல்லும்.

ஏதாவது ஒரு இடத்தில் ஒரு பிணம் அநாதரவாகக் கிடக்கின்றது, அல்லது மிதந்து செல்கின்றது எனச் செய்தி பரவும் போது, சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டுத் திரும்பி வராது போன இளைஞர்கள், யுவதிகளின் குடும்பங்கள், அப்பிணத்தை அடையாளம் காண்பதற்காய் ஓடிச் செல்வது மனதை உருக்கும் காட்சியாக இருக்கும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் மிகப்பெரும் பகுதி சிங்களப்படையின் சிறைச்சாலை போன்று, சித்திரவதைக் கூடம் போன்று, கொலைக்களம் போன்று இருக்கும். எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பயங்கர சூழ்நிலைக்குள்தான், அங்கிருக்கும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெறத் தமது வயல் நிலங்களைப் பயன்படுத்த முடியாதபடி தடுக்கப்பட்டுள்ளனர்.

நெல் விதைப்பதற்கும் இராணுவத்தின் அனுமதி பெறவேண்டும்; விளைந்தபின் அறுவடை செய்யவும், அதை வீட்டிற்கு எடுத்துச் செல்லவும், சிங்களப்படையினரிடம் இரந்து நிற்க வேண்டும்.

ஆனால், நெல்லை அறுவடை செய்து சூடு வைத்திருக்கும் போது, ஒரே இரவில் நெற்சூடுகளுக்கு படையினர் தீ வைத்து நாசமாக்கிவிடுவர்.

கடினமான சூழ்நிலையிலும் உடல் உழைப்பைச் செலுத்தி, இருக்கும் பணத்தைச் செலவளித்து பயிர் செய்தபின், அதன் பலனை இவர்கள் பெறும் சமயத்தில் அவற்றை அழித்து, மக்களை ஓட்டாண்டிகளாக ஆக்கிவிடுகின்றனர். இது நன்கு திட்டமிட்டுச் செய்யப்படும் ஒரு நாசவேலை ஆகும். அப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை அழித்துச் சிதைப்பது தான் சிங்களப்படையின் நோக்கமாகும்.

குடும்பிமலை, பெரியவெட்டுவான், தீவிவெட்டையை உள்ளடக்கிய பெரும்பகுதிகளில் நெற்செய்கை அதிகமாக இருக்கும். அறுவடைக்குத் தயாராக இருக்கும் வேளையில், ஆண்டுதோறும் இப்பகுதிக்குள் புகும் படையினர் நெற்பயிர்களை அழித்துச் செல்வர்.

## தேற்றம்

நீ ஈன்ற புதல்வர்க்கு நிகழ்ந்தது
அறியாயோ?
தாயாய்ச் சுமந்தவளின் தாளாத்துயரத்தின்
தீயாய் எழும்புவோம்
தேச விடுதலையின் ஓயாத கீத உருவாய்ப்
பரிணமிப்போம்
விடுதலைவேண்டி விரும்பி விறைந்தவரைப்
பரவும் புரட்சித் தீ
வெந்து விடுமோ?
விழலாகிப்போய் விடுமோ?
எந்த இயற்கையும் இதை ஏற்க மாட்டாது
ஆற்றில் எறிந்தாலும் அஞ்சோம்
அடுத்த கணம்
நூறாயிரம் கோடி ஆக
நாம் வேரோடி
மீறி எழுவோம்
விலங்கனைத்தும்
தகர்ப்போம்
மானத்தின் முன்னர்
மரணம் சரணாகதியாம்.

\- கல்வயலோன் -

1991 ஆம் ஆண்டு அறுவடைக்காலமாகிய தை மாதம், இப்பகுதியில் பாரியதொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து நெல்லை அழித்தனர்.


அதேபோல 1992ம் ஆண்டும் மக்கள் அறுவடைக்குத் தயாராகிய போதும் குடும்பிமலையில் ஒரு இராணுவ முகாமை அமைத்து, நெற்சூடுகளையும் நெல்வயல்களையும் அழித்தனர்.

இம்முறை, பயிர் செய்வதற்கு முதலீடுகள் இல்லாமல் மக்கள் அவதிப்பட்டபோது, 'கெயர்' ஸ்தாபனம் சிறிதளவு உதவி செய்து நெல் விதைப்பிற்கு உதவியது.

ஆனாலும் இந்த ஆண்டும் (1993) தீவிவெட்டை, நவிண்டியாமடு, மகிழவெட்டுவான்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழீழத்தில் தற்காலப் போர்க்கால சூழ்நிலையில் இடறும் மக்களுக்கு சாரணிய இயக்கம் சேவை செய்ய வேண்டும். குண்டு வீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்களினால் மக்கள் காயம் அடைகின்றார்கள். பொருளாதாரத் தடை என்பவற்றில் மிகவும் துன்பம் அனுபவிக்கின்றார்கள். ஒரு போர் வீரனான பேடன் பவல் எப்படி இடருற்ற மக்களுக்கு சேவையாற்றினாரோ அதேபோன்று எமது தமிழீழத்தில் சாரணிய இயக்கங்கள் பணிபுரிய வேண்டும். தமக்கு வருகின்ற இடர்களைச் சகித்துக் கொண்டு துன்பப்படுகின்ற ஏனைய மக்களுக்கு பணியாற்றியவர் சாரணர் ஸ்தாபகர் பேடன் பவல். போராளிகள் மண்ணைக் காக்கின்ற பணிபோன்று சாரணிய இயக்கங்கள் தமது நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும்.**

**22.02.92 அன்று தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் யாழ். பரி. சேவியர் கல்லூரியில் நடைபெற்ற சாரணிய இயக்க ஸ்தாபகர் பேடன் பவல் நினைவு தினக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.**

கொக்கட்டிச்சோலையின் வயற் பிரதேசங்களில் நுழைந்து சூடுகளுக்குத் தீயிட்டு, நெல்வயல்களுக்குள் உழவு இயந்திரங்களை ஓட்டி, வயல்களை அழித்துள்ளனர். சூடடித்து முடிந்த வயல்களில் இருந்து நெல்மூட்டைகளை ஏற்றிச் சென்றுவிட்டனர்.

இத்துடன் வந்தாறுமூலை, களுவாங்கேணி போன்ற சில இடங்களில் சந்தைகளில் இருந்து அல்லது கடைகளில் இருந்து உணவுப் பொருட்களை வாங்கித் தமது வீடுகளுக்குக் கொண்டு செல்வதாயின், ஒருவருக்கு ஒரு நாளைக்குத் தேவையான அரிசிச் சாமான்களையே கொண்டு செல்ல சிங்கள இராணுவம் அனுமதிக்கும். ஒரு குடும்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் இருந்தால் அந்த ஐவருக்கும் தேவையான உணவுப்பொருட்களை ஒருவர் வாங்கிச் செல்ல முடியாது. சிறுவர்களாக இருந்தாலும் சரிதான்; நோயாளிகள், வயோதிபர்களாக இருந்தாலும் சரிதான்; அவரவர்கள் சென்றே தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்கிவர முடியும். இதை மீறும் ஒருவர், அவர் ஆணோ, பெண்ணோ கொடூரமான சித்திரவதையை அனுபவிக்க வேண்டி இருக்கும். இந்த அளவுக்கு சிங்கள இராணுவம் மிருகத்தனமாகச் செயற்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தளவில் எஸ்.ரி.எவ். எனப்படும் விசேட அதிரடிப்படையிடமே ஆட்சி அதிகாரம் உள்ளது. அங்கே வசிக்கும் தமிழ் மக்கள் குடும்பம் குடும்பமாக இராணுவ முகாமில் பதிந்து, அதற்குரிய அடையாள மட்டையை வைத்திருக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளைகளுக்கும் தனியான பதிவுண்டு. வெளியூருக்குப் போகவேண்டுமாயின் இராணுவத்திடம் அனுமதி பெறவேண்டும். மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாதுவிட்டால் இராணுவ முகாமுக்குச் சென்று அதற்குரிய காரணத்தைச் சொல்ல வேண்டும்; அந்தக் காரணத்தை படையினர் நம்ப மறுத்தால் சித்திரவதை நடக்கும். புலிகளுடன் தொடர்பு என்று கூறியே சித்திரவதை செய்வர். சித்திரவதையிலிருந்து உடனடியாகத் தப்புவதற்காக, பல மாணவர்கள் 'ஆம்' என்றே பதிலளிக்க முற்படுவர். பின்னர் அவர்களைச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைத்து விடுவர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளைப் பொறுத்தளவில், அரை மைலுக்கு ஒரு தடை முகாம் என்ற ரீதியில் சிங்களப் படைகளின் சோதனைச் சாவடிகள் இருக்கும்.

பாடசாலைக்குச் செல்வதாயினும் சரி, வைத்தியசாலைக்குச் செல்வதாயினும் சரி, கடை, சந்தைகளுக்குப் போவதானாலும் சரி, ஒவ்வொரு தடைமுகாமிலும் உடலும், பொருட்களும் சோதனை இடப்பட்ட பின்பே அனுமதிக்கப்படுவர். இத்தகைய சோதனைச் சாவடிகளில், சிங்கள இராணுவத்துடன் சேர்ந்திருக்கும் ரெலோ, ஈ.பி.டி.பி. தேசத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துரோகிகளும் மக்களை வாட்டி வதைக்கின்றனர்.

வீதிச்சோதனை என்ற போர்வையில், மக்களிடம் இருந்து பணம் பறிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஆண்கள் போக்குவரத்துச் செய்வதென்பது, மிகக் குறைவு. உத்தியோகம் பார்க்கும் ஆண்களைத் தவிர மற்றவர்கள் தெருவில் இறங்குவதேயில்லை. எனவே குடும்பப் பெண்கள்தான் பொருட்கள் வாங்க கடைத் தெருவிற்குச் செல்வர்; அவர்களிடமிருந்தே பணத்தையும், பொருட்களையும் ஈ.பி.டி.பி. கும்பல்கள் பறித்துச் செல்வர்.

இரவில் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளைகளில் ஈடுபடும் இத்துரோகக் கும்பல்கள், பகலில் சிங்கள இராணுவத்துடன் இணைந்து படுகொலைகளில் ஈடுபடுகின்றன.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இத் துரோகக் கும்பல்களினால், மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

சிங்களப் படைகள் ஒருபுறமும், தேசத்துரோகிகள் இன்னொரு புறமும், முஸ்லிம் ஊர்காவல்படையினர் மறுபுறமும், சிங்களக் குடியேற்றவாசிகள் இன்னொரு புறமுமாக மட்டு, அம்பாறைத் தமிழர்கள் நான்கு பக்கங்களாலும் சூழப்பட்டு, இனப்படுகொலைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இப்போது சர்வதேச மனித உரிமை நிறுவனங்களில் ஒன்று, மட்டக்களப்பு நகரில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது. ஆனாலும் படையினரால் கைதுசெய்யப்படுவதையோ காணாமல் போகச்செய்வதையோ இந்த நிறுவனத்தால் தடுத்துநிறுத்த முடியவில்லை.

முன்னர் உடல்களை பகிரங்கமாக வீசியும், ரயர் போட்டு எரித்தும், தலைகளைத் துண்டித்தும் வந்தனர். இப்போது அப்படிப் பகிரங்கமாகச் செய்யாது, இரகசியமாக, தடயங்களின்றிச் செய்கின்றனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள காட்டுக் கந்தோர் என்ற இடத்தில், விசாரணைப் பகுதி என்ற பெயரில் சித்திரவதைக் கூடமொன்று உள்ளது. அங்கே கொல்லப்படும் தமிழ் மக்களது உடல்கள் சாக்கினால் சுற்றப்பட்டு, மட்டக்களப்பு வாவிக்கு மறுகரையில் இருக்கும் வவுணதீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடயமில்லாமது எரிக்கப்படுகின்றன.

மட்டு, அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்களில் 70 வீதத்தினர் விவசாயிகள். 20 வீதத்தினர் மீன்பிடித் தொழில் செய்பவர்கள். ஆனாலும் விவசாய முயற்சியைச் செய்யவிட்டுப் பின் அழிக்கின்றனர்; வாவியில் மீன்பிடியையும் தடைசெய்துள்ளனர். இதனால் 90 வீதமான மக்கள் நிவாரணத்தை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தன்னம்பிக்கையுடன், சொந்தக்காலில், சுயமரியாதையுடன் தமிழர்கள் வாழ்வதைச் சிங்கள அரசு திட்டமிட்டுத் தடுக்கின்றது. தமிழர் தேசியத்தை அழித்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்குச் சிங்கள அரசு கடைப்பிடிக்கும் வழிகளில் இதுவும் ஒன்றாகும்.

> **எம் மண் இனியும்**
> **இரங்காது! ஒருபோதும்**
> **கைம்மண் கூடப்பிறன்**
> **காலடிக்குள் போகாது!**

இன்று, மட்டு, அம்பாறை மாவட்டத்தில் 80வீதமான மக்கள் அகதிமுகாம்களிலும், காடுகளிலுமே வாழ்கின்றனர். இந்த உண்மையை, சிங்கள ஆயுதப்படைகளுடன் கைகோர்தபடி இருக்கும் தமிழ்க் குழு ஒன்றின் நாடாளுமன்ற உறுப்பினரே கூறியுள்ளார்.

எல்லையோரமுள்ள சிங்களக் கிராமங்களுக்கு அருகிலும் மற்றும் முஸ்லிம் கிராமங்களுக்கு அருகிலும், இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள கிராமங்களிலும் தமிழ் மக்கள் அச்சத்தின் காரணமாக வாழ்வதில்லை.

இவ்வாறு மட்டு, அம்பாறை மக்களது வாழ்வு அவலம் நிறைந்ததாகவே இருக்கின்றது.

ஆனாலும், சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்காக, ஆக்கிரமிப்பு இராணுவத்தை அப்புறப்படுத்துவதற்காக இந்த அவலங்கள் எதையும் எதிர்கொள்ள அவர்கள் தயாராகவே இருக்கின்றனர். படுகொலைகள் அம்மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்கவில்லை; மாறாகப் புடம்போடுகின்றன. விடுதலைப் போரில் இளைஞர்களும், பெண்களும் பெருமளவில் இணைகின்றனர். **அநியாயமாக, குரூரமான முறையில், தமது பிள்ளைகள் சிங்களப்படைகளால் படுகொலை செய்யப்படுவதைவிடப் போராளிகளாக மாறி, விடுதலைப் போரில் ஈடுபடுவதையே அங்குள்ள மக்கள் விரும்புகின்றனர்.** ■■

www.tamilarangam.net

# கப்டன் பிரான்சிஸ்



அன்பின் பிரான்சிஸ்,

எத்தனை வருடங்கள் ஓடி விட்டன. ஆனாலும் உன் நினைவு மட்டும் எம்மை விட்டு ஓட மறுப்பது ஏன்? நீ உண்மையாக வாழ்ந்தாய்; மட்டக்களப்பு மண்ணின் விடுதலைப் பண் பாடப்படும்போது உனது பெயர் இணைக்கப்படாமலிருக்க மாட்டாது. அந்தப் பண்ணின் ஆரம்ப வரிகளில் நிச்சயம் உனது பெயர் இருக்கும். அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன். நாங்கள் சைக்கிளில் திரிந்தது. ஆற்றில் தோணியில் பயணமாகியது. அந்தப் போர்க்களங்கள்... எல்லாமே இன்றுபோலிருக்கின்றன.

நீ மட்டும் அருகிலில்லை.

நீயும் நானும் டேவிட்டும் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு சைக்கிளில் எமது பிரயாணத்தைத் தொடங்கிய அந்த நாட்களை நினைத்துக் கொள்கிறேன். போகும்போது நீ என்னவெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தாய். உனது ஆசைகள் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றக் கூடியளவிற்கு அப்போது எம்மிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. இரண்டே இரண்டு கைத்துப்பாக்கிகளுடனேயே எமது பயணத்தை ஆரம்பித்திருந்தோம். போகும் போதே வழியில் பரந்தனில் சிவதாஸன் என்ற துரோகிக்கும், வவுனியாவில் புளொட் இயக்கத்தினரைக் காட்டிக் கொடுத்த தர்மே என்ற சிங்களவனுக்கும் மரண தண்டனை வழங்கி விட்டுச் சென்றோம்.

காட்டுப் பாதைகளூடாக மதவாச்சிவரை மிதிவண்டியில் சென்றோம். அங்கிருந்து பேருந்திலும் புகையிரதத்திலும் சென்று மட்டக்களப்பு மண்ணை மிதித்தோம். அப்போது நீ என்ன சொன்னாய் "அப்பாடா... மட்டக்களப்புக்கு ஆயுதம் வந்திட்டுது; இனித்தான் ரைகேசிட விளையாட்டு துடங்கப் போகுது.'' இந்த வார்த்தைகளை நினைத்துக் கொள்கிறேன். இன்று போராட்டம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்க்கும் போது இரண்டு சுழல் துப்பாக்கிகளின் சக்தி மிக அற்பமானதே. ஆனால் அவைதான் அங்கிருந்து ட்றக்டர் கணக்காக ஆயுதங்களை கைப்பற்றுவதற்கு வித்தாக அமைந்தன. "யாழ்ப்பாணம் கோட்டை விடுவிக்கப்பட்டதற்கு மட்டக்களப்பு ஆயுதங்களின் பங்கும் ஒரு காரணமாக இருந்தது." என்று கொக்கட்டிச் சோலையில் நியூட்டன் பேசும்போது நான் அந்த இரு சுழல் துப்பாக்கிகளையும்தான் நினைத்துக் கொண்டேன்.

நாங்கள் மட்டக்களப்பு சிறையிலிருந்து நிர்மலாவை மீட்டுவந்த அந்தக் காட்சியை நினைத்துக் கொள்கிறேன். அது உனது இழப்பின் கொடுமையை எனக்கு புரியவைக்கின்றது. எப்படி இயங்கினாய் நீ; ஒரு பம்பரம் போல. சிறைச்சாலைக்கு வெளியில் நின்ற சிங்களக் காவலனொருவனை நாம் மடக்கி உள்ளே போக முயற்சித்தோம், சிறைக்காவலர்கள் வேடத்தில் நாம் சென்றிருந்தாலும் கதவைத் திறந்த ஆரம்பத்திலேயே உள்ளே இருந்தவர்களுக்கு நிலைமை புரிந்து விட்டது. எல்லோரும் கதவை இழுத்து மூட முயற்சித்தனர், உனது கை நடுவில் அகப்பட்டுவிட்டது. நீ கத்தினாய். எப்படித்தான் அசுரபலம் வந்ததோ? உள்ளே சென்று விட்டோம். நாம் போனவேகத்தில் பொலிசாருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்த காவலனை தடுக்கப் பாய்ந்தாய் நீ. அவன் உயரமானவன்; நீயோ குள்ளம். அங்கிருந்த கதிரையின் மேலேறி அவனது தலையில் .45 சுழல் துப்பாக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

யினால் நீ அடித்தாய். அவன் சுருண்டு விழுந்தான். இதற்குள் ஒரு காவலன் நிர்மலாவின் அறைத்திறப்பை எடுத்துக்கொண்டு ஓடி மறைந்துவிட்டான். நாங்கள் கதவை உடைத்தோம். உடைத்ததின் பின்னர்தான் கதவின் கனம் குறித்து ஆச்சரியப்பட்டோம். அந்தப்பணி வெற்றிகரமாக நிறைவேற நீயும் சந்திரனண்ணாவும்தான் காரணம். சந்திரனண்ணா வெளித்தொடர்புகளைக் கவனித்துக் கொண்டார். ஏற்கனவே நீ அந்தச் சிறையில் இருந்தவன் என்ற வகையில் உனக்கு அந்தச் சிறைச்சாலை அமைப்பு, நடைமுறைகள் பற்றித் தெரிந்திருந்தது. அதனால் எமது வேலை சுலபமாகியது. பிரான்சிஸ் உன்னை நினைக்கும்போது, தண்டவாளப்பாதையால் நாம் நடந்துகொண்டு வரும்போது நீ சொன்ன பகிடிதான் முதலில் நினைவுக்கு வரும். மட்டக்களப்பிலிருந்து நிர்மலாவை புகையிரதம், பேருந்து வழியாக மன்னாரை நோக்கிக் கூட்டிக்கொண்டு வந்தோம். மதவாச்சி வீதியில் நாங்கள் சென்ற பேருந்தை விலத்திக் கொண்டு சிறிலங்கா இராணுவத்தினர் சென்றனர். அவர்கள் நேரியகுளம் சந்தியில் திடீர்ச் சோதனை செய்வது வழக்கம். ஆகையால் நாம் அதற்கு முன்னரே இறங்கிவிட்டோம். அங்கிருந்து மடு ரோட்டுவரை தண்டவாளப் பாதையால் ஒரே நடைதான்.

நீண்டநேர நடை! அனைவருக்கும் தாகம். அந்த நடு இரவில் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்பது தெரியவில்லை. ஒருவருடைய வேதனையை மற்றவருக்குக் காட்டாமல் நடந்து கொண்டிருந்தோம். அப்போது நீ சொன்னாய் "காக்கா! தமிழீழம் கிடைச்ச உடன் தண்டவாளக் கரை

## தரிசனம் சிறப்பு வெளியீடாக தமிழோசை எனும் வீடியோ இதழ்

தாயக மண்ணின் நினைவுகளைக் கிளர்த்தும் ஒளிக் கீற்றுகளைச் சுமந்து வெளிவந்திருக்கின்றது.




நவீன தொழில்நுட்ப வசதிகள் எதுவுமற்ற நிலையிலும், போர்க்காலச் சூழலிலும் மக்களின் போராட்ட வாழ்வியல் யதார்த்தத்தை எம் கண்முன்னே படம் பிடித்துக் காட்டும் அரிய கலைப்படைப்பாக வியாபார நோக்குகளுக்கு அப்பால் நின்று எதார்த்த வாழ்வின் கருத்தொன்றி நிற்கும் பொறுப்பு வாய்ந்த உன்னத சிருஷ்டியாக தமிழோசை விளங்குகின்றது.

தென்தமிழீழ மக்களின் போராட்ட வாழ்வை அழகாகச் சித்தரிக்கும் இவ்வீடியோப் படத்தில் இணைந்து பணியாற்றிய அனைத்துக் கலைஞர்களையும் தலைவர் வெகுவாகப் பாராட்டினார்.

"எதிர்பார்த்ததைவிட மிகவும் தரமாகவும் பார்ப்போரின் மனதைத் தொட்டு போராட்ட உணர்வை தூண்டிவிடும் வகையாகவும் இந்தக் கலைப்படைப்பு அமைந்திருப்பது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப்படத்தில் பங்கேற்ற சகலரும் மிகவும் தத்துருபமாக, சிறப்பாக நடித்துள்ளனர். முல்லை மண்ணின் இயற்கை அழகும், வாழ் நிலையும் இக்கலைப் படைப்பிற்கு மேலும் மெருகூட்டுகிறது. எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தையும் மக்களின் உறுதி தளராத பங்களிப்பையும் வெளிக் கொண்டு வந்து தமிழோசை வெற்றி கண்டுள்ளது." என்று தலைவர் தமிழோசை கலைஞர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கும் வைபவத்தில் கூறியிருந்தார்.

ஆம் அந்த உன்னத கலா சிருஷ்டியை நீங்களும் தரிசித்துக் கொள்ளும் முகமாக தரிசனம் வீடியோ இதழ் சிறப்பு வெளியீடாக வெளிவருகின்றது.

இதில் தமிழீழப் பாடகர்களின் உள்ளத்தைத் தொடும் போர்க்லாலப் பாடல்களும் வெளிவந்துள்ளன. மேலும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் (1992) மாவீரர் தினச் செய்தியும் இச் சிறப்பிதழில் வெளிவந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யெல்லாம் நாங்க கிணறு தோண்டி வைப்பம். ஏனெண்டா அப்ப முஸ்லீம்கள் தங்களுக்கு ஒரு நாடு வேணும் எண்டு எங்களோட சண்டை பிடிப்பானுகள். அந்தநேரம் எருக்கலம் பிட்டி முஸ்லீம், காத்தான் குடிக்கு போகவேண்டியிருக்கும். அப்ப அவன் தண்ணிவிடாயால அவதிப்படக் கூடாதல்லா." என்றாய். இதைக்கேட்டு நானும், நிர்மலாவும், கூடவந்த சகோதரியும் சிரித்தோம். இடையில் ஒரு பாழ்ங்கிணறு தென்பட்டது. நீ ஒரு மெழுகுப் பையில் நிர்மலா அக்காவின் ஒரு சேலையைக்கட்டி தண்ணீர் அள்ளித் தந்தாய். மெழுகுப்பை தண்ணீர் கோலுவதற்கு வசதியாக ஒரு கல்லைக் கட்டித் தொங்கவிட்டிருந்தாய். அந்த நேரம் அந்தத்தண்ணீர் தேவாமிர்தமாக இருந்தது. அடுத்த நாள் அனைவருக்குமே வயிற்றோட்டம். அது, குடித்தது பாழ்ங்கிணற்றுத் தண்ணீர் தான் என்பதை உறுதிப்படுத்தியது.

அன்று முஸ்லீம்கள் பற்றி வேடிக்கையாகச் சொன்னாய். ஆனால் வரலாறு மிக மோசமான படிப்பினைகளை எமக்குத் தந்துள்ளது. அதை நான் மட்டக்களப்பு மண்ணுக்கு மீண்டும் சென்றபோதுதான் தெரிந்து கொண்டேன். முஸ்லீம்கள் பற்றி இப்படி வேடிக்கையாகச் சொன்னாலும், முஸ்லீம்கள்மீது நடவடிக்கை எடுக்கும்போது பல முறை சிந்தித்து எடுக்க வேண்டும் என்றாய். அப்படித்தான் நடந்து கொண்டோம். ஆனால் எமது பெருந்தன்மைகள் பலவீனங்களாக உணரப்பட்டுவிட்டன. என்னையும் உன்னையும் எனது நண்பர்களையும் உபசரித்த குடும்பத்தவர்களை அகதிமுகாமில் காணும் அவலத்தை ஏற்படுத்திவிட்டது.

இரண்டு எஸ்.எம்.ஜிக்கள், நாலு றிப்பீட்டர்கள், இரு சுழல் துப்பாக்கிகள், ஒரு வேட்டைத் துப்பாக்கி இவைதான் நாம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தைத் தாக்கச் செல்லும் போது கொண்டு சென்ற ஆயுதங்கள். அதிலும் ஒரு றிப்பீட்டர் இயங்கவில்லை. தாக்குதலுக்கு முன் எந்தப்பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்துவது என்று திட்டமிடும்போது நீ களுவாஞ்சிக்குடி மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். புளொட் இயக்கத்தைச் சேர்ந்த பார்த்தனின் மறைவுக்குக் காரணமாக இருந்தவர்கள் அவர்கள். ஆகவே அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் திமிரை அடக்க வேண்டும் என்றாய். நாம் தாக்குதல் நடத்தினோம். மட்டக்களப்பின் செல்வமான பரமதேவாவையும், ரவியையும் இழந்து ஒரே ஒரு ரைபிளை மட்டுமே கைப்பற்றினோம். அத்தாக்குதலில் சயனட் உட்கொண்ட நிலையில் ''அம்மாட்ட சொல்லுங்கோ; உங்கட மகன் சண்டையிலதான் செத்தானெண்டு." என்று பரமதேவா சொன்னது உன்னையும் என்னையும், ஏன் அந்தத்தாக்குதலில் பங்குபற்றிய அனைவரையுமே பாதித்திருந்தது.

அதற்குப் பின் வரலாறு வேகமாக ஓடியது. ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்கி வெற்றி கண்டோம். இதன் பின் நீயும் நானும் இணைந்து தாக்குதல்களில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. நான் யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். நீ மட்டக்களப்பில் செய்யும் சாதனைகளைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். தம்பட்டையில் நடுவீதியில் நின்று M.16 உடன் தாக்குதல் நடத்தினாயாம். இப்படியெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் உனது சாதனைகளைப் பற்றி எல்லோரும் எனக்கு வந்து சொல்லுவார்கள். மட்டக்களப்பு நகரத்தினுள் உனக்காக நடந்த முற்றுகைதான் எத்தனை?

இந்திய இராணுவம் வந்த பின்னர் உனது பெயர் மட்டக்களப்புக்கு வெளியிலும் பிரபல்யமாகியது. அன்னையர் முன்னணியை ஸ்தாபித்ததும், உண்ணாவிரத நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியதும் அஞ்சாத மக்கள் கூட்டம் புலிகளின் பின்னால் இருக்கிறது என்பதை உலகிற்கு புலப்படுத்தியது. என்ன செய்வது என்று திண்டாடும் நிலையை இந்தியப்படையினருக்கு ஏற்படுத்தினாய். உண்ணாவிரதத்தை குழப்பமுயன்று தோற்றுப்போனது இந்தியப்படை. "பாரதப் போர் 18 நாட்கள்; பாரதம் தொடுத்த போர்கள் எத்தனை நாட்கள்?" என்ற கேள்வியை மட்டக்களப்பு நகர் முழுக்க ஒட்டினாய். மட்டக்களப்புக்குள் புலிகள் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அடிக்கடி உணர்த்திக் கொண்டிருந்த போராளி நீதான் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். மேஜர் ஜெயராம்; அவனை எனக்கும் தெரியும். இந்திய இராணுவத்திடம் நான் கைதியாக இருந்தபோது அவனது திமிர்ப் பேச்சுக்களைக் கேட்க நேர்ந்தது. உலகத்திலேயே தலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறந்த அறிவாளி தானே என்ற எண்ணம் அவனுக்கு. இந்திய இராணுவம் உன்னைத் தேடிச் சல்லடைபோட்டு முகாம் திரும்பியவுடன் அவர்களுடன் நீ தொலைபேசியில் பேசுவாயாம். "என்ன பிரான்சிஸ்! உங்கட ஆக்களெல்லாம் பக்கத்திலதான் இருக்கிறாங்க; நாங்க எப்ப சந்திக்கிறது?" என்று கேட்டபோது "அது கஷ்டம். நம்மட கழுத்தில சயனைட் இருக்குதே." என்று பதிலளித்தாயாம். "ஏன் உங்க வாழ்க்கையை பழுதாக்குறீங்க?" என்று கேட்டதற்கு 'நானா? நீங்களா?' என்று எதிர் கேள்வி போட்டாயாம்.

மேஜர் ஜெயராமுக்குச் சொன்னதை நீ செய்து காட்டினாய். உனது சொந்த ஊரவனே உன்னைக் காட்டிக் கொடுத்தான். உன்னைச் சுற்றி வளைத்த இந்தியப்படையினரிடமிருந்து நீ தப்ப முடியவில்லை. ஏற்கனவே நடந்த முற்றுகையில் தப்பி ஓடும்போது ஒரு கண்ணாடி உனது காலை வெட்டியிருந்தது. அதன் காயம் உனது வேகத்தை மட்டுப்படுத்தியது. அப்போதும் கூட நீ அவர்களின் ஆயுதத்தைப் பறித்துக் கொண்டுதான் ஓடினாய். ஒரேஒரு வெடிதான் உனக்கு, அதுவும் காலில். நீ சயனைட்டை உட்கொண்டாய். "நம்மட கழுத்தில சயனைட் இருக்குதே." என்ற உனது வரிகள் உலகமெங்கும் எதிரொலித்தன.

B.B.C. யின் அன்றைய தமிழ்ச் செய்தியிலும், செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்திலும் உன்னைப் பற்றிய குறிப்புக்களே கூடியளவு நேரத்தைப் பிடித்தன. உனது பணியின் முக்கியத்துவத்தை அன்றுதான் உலகம் அறிந்து கொண்டது. "பிரான்சிஸின் மரணம் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியலில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்." என்று B.B.C. குறிப்பிடுமளவிற்கு உனது வரலாறு அமைந்திருந்தது.

பிரான்சிஸ்! இன்று வரலாறு மாறிவிட்டது. வவுனியாவில் எந்த புளொட்காரரை காட்டிக் கொடுத்ததற்காக தர்மே என்ற சிங்களவனைச் சுட்டோமோ அதே வவுனியாவில் அதே புளொட் இயக்கம் இன்று முழு தமிழ் இனத்தையுமே காட்டிக்கொடுக்கின்றது. பல தர்மேக்கள், சிறிசேனாக்களின் எடுபிடிகளாகிவிட்டனர் அவர்கள். பார்த்தனைச் சுட்டதற்காக களுவாஞ்சிக்குடி காவல் நிலையம் மீது தாக்குதல் நடத்துவோம் என்றாய். அன்று நாம் களுவாஞ்சிக்குடியை கைப்பற்றாவிட்டாலும் இளைய தலைமுறையினர் கைப்பற்றிக் காட்டிவிட்டனர். இன்று அதே களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா பொலிசாருடன் இணைந்து புளொட் சிறிலங்காவின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் போகின்றதாம். ஆனாலும் நாம் அன்று செய்தது சரியேதான். இனியும் செய்யப்போவது சரியைத்தான்.

கரும்பறவை
(26.06.1992)



## போர் முரசு கொட்டுவோம்

## தெருக்கூத்து

**சிறிலங்கா படைகளின் அண்மைக்கால நிலைப்பாடு பற்றியும், இராணுவம் நடத்துகின்ற திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கைகள் பற்றியும் எமது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் போரிட தமிழ் மக்கள் அனைவருமே கலந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கியும் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகத் தீவகப் பிரிவினால் "போர் முரசுகொட்டுவோம்" எனும் தெருக்கூத்து யாழ் குடாநாட்டில் பலபாகங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# புதுயுகம் ஒன்று புலர்ந்தது இங்கே


அன்றொரு நாள் பெண்ணினம்
அடிமையாய் கிடந்திங்கு
அல்லல் பட்டதும்
அறிந்திடுவீரே.
ஆண்டியும் அரசனும்
அடிமையாக் கொண்டனர்.
தாண்டியே தடைகளை
தகர்த்திடாப் பெண்ணவள்.

வலிமை சேர்ப்பது
தாய்முலைப் பாலென்று
வார்த்தைகள் சொன்னவர்
வாய்ச் சொல்லின் வீரர்
கொடியவர் தாமவர்
கொண்டனர் பெண்ணை
அடிமையாய் மண்ணில்.

அரிசி, பருப்பை
அடுப்பினில் வைக்கவே
தகுதியுள்ளவர்
தானெனப் பெண்ணை
கருதியும்
அவர் காரியம் செய்தனர்.
துன்பத்தீயில்
கருகியே பெண்ணினம் மாய்ந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீர் கெட்ட இதயங்கள்
சீதனம் கேட்டதும்,
நேர்கெட்ட நெஞ்சங்கள்
நெருக்கடி செய்ததும்
கூர் கொண்ட வாளெனக்
குத்தியது.
காரிகை நெஞ்சம்
பிளந்தது !
சிதைந்தது.



காலமும் மாறிட
காரிகை மாறினாள்.
புதுயுகம் ஒன்று
புலர்ந்தது இங்கே.
புரட்சிப் பெண்களின்
புலியணி நடக்குது.
இடையிலே பட்ட
கீழ்நிலை ஒழியுது.
அடிமை வாழ்வதன்
அவலங்கள் அழியுது.

- சாவித்திரி அத்துவிதானந்தன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரத்தைத் தேடி...



**14.07.1992 பௌர்ணமி முழு நிலவு. கறுக்காய் வெட்டையில் நிலை கொண்டிருந்த எமது தோழர்களின் இதயங்களிலோ வேதனைப் பெரு நெருப்புப் பற்றியிருந்தது.**

"தேனுஜா வருவாள்" என்று நம்பிக்கையைச் சுமந்தபடி இன்னும் அவர்கள் விழிகளை வழியிற் பதித்தபடி காத்திருந்தனர்.

காலை 10.00 மணிபோல் இராணுவத்தின் நிலைகளை வேவு பார்க்கச் சென்றிருந்தாள் தேனுஜா. அவள் போய் ஒரு மணித்தியாலம் தான் கழிந்திருக்கும்... அண்மையில் திடீரெனக் கேட்ட குண்டு வெடிப்புச் சத்தம் எல்லோரையும் ஒரு கணம் உலுக்கி விடுகிறது.

'தேனுஜாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ' எல்லோர் மனங்களிலும் ஏக்கம்.

'தேனுஜாவைத் தவிர வேறு யாரும் அத்திசையில் செல்லவில்லையே... இப்படித்தானே பல நாட்கள் நடந்தன'.

இது இன்னொரு பக்க மனம்.

எதிரியின் பதுங்கு குழிக்குள் நின்று கொண்டே எதிரியைத் தேடுகின்ற இலாவகமும், பொறிவைத்துக் காத்துக்கிடக்கின்ற எதிரியின் கண்களை ஏமாற்றி விட்டுத் தப்பி வருகின்ற திடசித்தமும் தேனுஜாவுடன் கூடப்பிறந்த திறமைகளாயிற்றே...

எப்படியும் எங்கள் தேனுஜா வருவாள்.

விழிகள் பாதையை இறுகக் கவ்வியிருந்தன.

இப்படித்தான் அன்றும் ஒரு நாள்...

தான் அவதானித்த எதிரியின் நிலைகளைக் காட்டுவதற்காகத் தளபதிகளைக் கூட்டிச் சென்றிருந்தாள். பாதையில் ஓரிடத்தில் அவர்களை நிறுத்தி வைத்துவிட்டு முன்னே சென்று மீண்டும் நிலைமையை பார்த்துவர எண்ணினாள்.

அங்கே....

எதிரி ஒருவன் தன்னை உருமறைத்தபடி மர நிழல் ஒன்றில் நின்றிருந்தான். அவனை எமது தோழர்கள் என நினைத்தவள் "யார் அண்ணாவா" என வினாவுகிறாள்.

ஒரு கணம்தான்...

நிலைமையைப் புரிந்து கொண்டாள். எதிரியின் துப்பாக்கி இயங்குகிறது. வேவு பார்ப்பதற்காகத் துப்பாக்கியை வைத்துவிட்டுக் கைக்குண்டுடன் சென்ற தேனுஜா சிறிதும் பதறவில்லை. சிரித்தபடியே எம்மிடம் ஓடிவந்தாள். "ஆமியை நான் எங்கட அண்ணாக்கள் எண்டெல்லே நினைச்சுப் போட்டன்." என்று கூறிச் சிரித்த தேனுஜா...

மீண்டும் வருவாள்.

"எங்கள் தேனுஜாவுக்கு எதுவும் நடக்காது." எல்லோர் இதயங்களிலும் இதே ஏக்கம்; எல்லோர் உதடுகளிலும் இதே உச்சரிப்பு.

"நேரம் நடுநிசியையும் தாண்டிக்கொண்டிருக்கின்றது. எங்கள் தேனுஜாவை இன்னும் காணோமே....

அப்ப ஏதாவது நடந்திருக்குமோ...."

இதயம் நம்ப மறுத்தது. மீண்டும்....

சருகுகள் மிதிபடும் ஓசை. எல்லோர் இதயங்களிலும் நம்பிக்கையின் துளிர்ப்பு.

"தேனுஜா... தேனுஜா..." வோக்கியில் எங்கள் நம்பிக்கைகளையெல்லாம் ஒன்றாக்கிக் கூப்பிடுகின்றோம். "தேனுஜா...! நாங்கள் கிட்டத்தான் நிக்கிறம் வாங்கோ."

சருகுகளின் ஓசையில் ஒருகணம் துளிர்த்த நம்பிக்கை மீண்டும் தவிடு பொடியாய்....

எங்கள் தேனுஜாவை நாங்கள் இழந்து விட்டோம். கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல் எல்லோருடைய முகங்களும் ஒரு கணம் மண் நோக்கிக் கவிழ்ந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆம்! இவளின் இழப்பை யாரும் இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

'எப்போதும் அன்பு குழைந்த முகத்துடன் எல்லோருடனும் எந்த விதப் பேதமும் இன்றிப் பழகுகின்ற மதனி சாகவில்லை' என்று அவளை நேசித்த அவளின் கிராமத்து மக்கள் இன்னும் உறுதியாகக் கூறிக் கொள்கிறார்கள்.

இதுதான் எங்களுடைய விடுதலைப் போராட்டம். ஒவ்வொரு போராளியும் வாழ்விலும் சாவிலும் இந்தத் தேசத்தின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து போயிருக்கின்றார்கள்.

அழ மறந்துபோய் மதனியின் போராட்ட வாழ்வை நினைவு கூருகின்றனர் அவளின் பெற்றோர், சகோதரிகள்....

இவளுக்கு யாரையும் கோபிக்கத் தெரியாது. அதே நேரம் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிப்போகின்ற சுபாவமும் இவளுக்கில்லை.

இந்திய இராணுவம் எம் மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்திலே துணிந்து மாணவியாக இருந்துகொண்டே தன்னுடைய பங்களிப்பைச் செய்தவள். அக் காலத்தில் இந்திய இராணுவ் வெறித்தனத்துக்கெதிராக நடைபெற்ற ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், மறியற்போராட்டங்கள் எதிலும் தேனுஜாவைக் காணலாம். வடமராட்சி மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இவள், மாணவர்கள் இந்திய இராணுவத்தால் வெறித்தனமாகத் தாக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் எதிரியின் பாசறை தேடிச் சென்று நியாயம் கேட்டவள். எந்த நேரத்திலும் தன் உயிருக்கு இதனால் அழிவு ஏற்பட்டுவிடுமோ என இவள் அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும் போது தேனுஜா தெளிவான, முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தாள். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவள். அவள் தனது பாடசாலைப் பிராயத்திலேயே தனது வாழ்க்கைத் துணைவனாக நேசித்தவன், இவளின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக் கொள்ள முடியாது தோற்றுப் போனான். தேனுஜாவோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர்கொண்டு புதிதாய்ப் பிறந்தாள்.

உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக இவள் திகழ்ந்தாள். துள்ளித்திரிகின்ற நடையும், எதையும் கலகலப்பாக மட்டுமே பேசத் தெரிந்த இவளின் தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாசப் பிணைப்பையல்லவா ஏற்படுத்தி நிற்கின்றது.

இவள் காயப்பட்டிருந்த நேரம் 'ஏன் மதனி? இனியாவது வீட்டில் நிற்கலாம் தானே.' என்று இவளுடன் பழகியவர்கள் கேட்ட நேரம் மட்டும்தான் இவளது முகத்திலே கோபத்தைக் கண்டதாகக் கூறுகின்றார்கள்.

உண்மைதான். இதை இவளுடன் கூட இருந்த ஒவ்வொரு போராளியும் மறக்க மாட்டார்கள்.

தேனுஜா!

இவள் மகளிர் படையணியின் வரலாற்றில் ஓர் புதிய திருப்புமுனை. 1989ம் ஆண்டு 6வது பயிற்சி முகாமிலே தனது பயிற்சியை முடித்துக் கொண்ட இவள் தனது



## கப்டன் தேனுஜா

பாச வெப்பத்தில் மட்டும்
உருகும்
பனிப்பாறை இவள்.
ஆனால்
தேசத்தை எரித்திடும்
எதிரிப்படைக்கோ
பழுக்கக் காய்ச்சிய
இரும்புக் கணை.
அதனால்தான்
கூரிய
பார்வை நெருப்பின் ஒளியில்
பகைவர்
பாசறை தேடி நடந்து,
பதுங்கிய புலியாய்
பசிதாகம் மறந்து
பல நாட்கள் இருந்தாள்.
தீட்டிய செவிகளுக்குள்
எதிரியின் அசைவுகளைத்
தீர்க்கமாய்ப் பதித்துத்
தீரமுடன் எழுந்தாள்.
பகைமையைப் பொசுக்கிட எரி
மலையாய் எழுந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# "விழித்தெழுவோம்"

**விடுதலைப் புலிகள் மகளிர்படையணி உருவாக்கிய "விழித்தெழுவோம்" பாடல் ஒலியிழை நாடா தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ஜெயாவினால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. உளத்தை உருக்கும் சக்தி வாய்ந்த பாடலின் தொகுப்பாக "விழித்தெழுவோம்" ஒலியிழை நாடா விளங்குகின்றது. இவ் ஒலியிழை நாடாவின் உருவாக்கத்தில் பங்கேற்ற அனைத்துக் கலைஞர்களையும் மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா கௌரவித்தார்.**

ஒவ்வொரு செயற்பாட்டிலும் புதிய முத்திரை பொறித்து நிற்பாள். அருள் 89 எனும் துப்பாக்கி எறிகணையைச் செலுத்துவதில் இவள் ஒரு போதும் தோல்வி கண்டதில்லை.

தேனுஜா தனது பயிற்சியை முடித்துக்கொண்ட காலத்தில் இருந்து அவள் இல்லாமல் எந்தச்சண்டையும் நடந்ததில்லை. அவளைச் சண்டைக்குச் செல்லவிடாது யாராலும் தடுக்கவும் முடியாதிருந்தது.

தேனுஜாவின் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே ஒரு தனி வரலாறு. எந்தக் களத்திலும் இவள் தனது தனியான முத்திரையைப் பதிக்காது வரவில்லை.

பலாலி இராணுவ முகாமைச் சுற்றி மகளிர் படை எல்லையிட்டு நின்றபோது தேனுஜாவின் கால்கள் எப்போதும் எதிரியின் முகாமைச் சுற்றிச் சுற்றி நடந்தன. இராணுவ நடமாட்டம் அனைத்தையும் ஒன்றுவிடாது அவள் விழிகள் அவதானித்தன. அப்போது இராணுவப் பகுதியில் இருந்து கிரனேட், டொங்கான் ஷெல் போன்றவற்றை எடுத்து வந்தாள். இதைத் தொடர்ந்து கட்டுவனில் ஏற்பட்ட மோதலில் தேனுஜா காயமடைந்தாள். ஆனால் எந்தக்காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கிவிடவில்லை. வீறு கொண்டெழவே வைத்தன.

சிலாபத்துறை முகாம் தாக்குதலில் இவளது போர்திறனைப்பற்றி எப்பொழுதும் எமது தோழிகள் பெருமையுடன் நினைவு கூருவார்கள். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள போராளிகளுக்கு மகளிர்படை என்றவுடன் நினைவுக்கு வருவது தேனுஜாதான். அந்தளவு தூரத்திற்குச் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் அவள் வீரத்துடன் போரிட்டாள்.

சிலாபத்துறை முகாம் தாக்குதலின் முதல் கட்டமாக, சிலாபத்துறை மினிமுகாம் பயங்கரமான மோதலின் பின் எம்மால் வெற்றி கொள்ளப்பட்டது. அடுத்த கட்டமாகப் பிரதான முகாமைக் கைப்பற்றும் முயற்சி நடைபெற்றது. தேனுஜாவின் குழுவினர் வானிலிருந்து வரும் குண்டு மழையையோ, ஷெல் வீச்சையோ பொருட்படுத்தாது, பாய்ந்தோடி, முகாமின் ஒரு பகுதிக்குள் நுழைந்துவிட்டனர். எவரின் உதவியையுமே பெற்றுக்கொள்ள முடியாத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலையில் நீண்ட நேரமாகத் தேனுஜாவும் அவள் குழுவினரும் அந்த இடத்தில் நின்றவாறு இராணுவத்தினருக்குத் தரை மார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ உதவி கிடைக்காதவாறு தடைசெய்து கொண்டிருந்தனர். தேனுஜா தனது அருள் 89 எறிகணைகளை ஒவ்வொன்றாக முகாமினுள் செலுத்தி எதிரியின் வேகத்தை அடக்கிக்கொண்டிருந்தாள்.

இந்நேரம் இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் வானில் இருந்து விமானம் மூலம் ரவைப் பொதிகள் போடப்பட்டுக் கொண்டிருந்தன். இராணுவ நிலைக்கு அண்மையில் விழுந்த ரவைப் பொதிகளில் இரண்டைத் தனியனாக ஊர்ந்து இழுத்து வந்தாள் தேனுஜா. குழந்தையாய் குதூகலித்து நிற்கும் தேனுஜாவைக் களத்திலே கண்டால், தேனுஜா தான் என்று யாரும் நம்பமாட்டார்கள். அந்தளவு தூரத்துக்குச் சினம்கொண்ட வேங்கையாய்க் கிளர்ந்தெழுந்து நிற்பாள். 'சிலாபத்துறை முகாமைத் தகர்க்காது பின்வாங்க மாட்டேன்.' என்ற அவளது வேகம் வீரச்சாவைத் தழுவும் வரை சிறிதும் தணியவில்லை. 'எப்படியேனும் எதிரியை இம்மண்ணிலிருந்து விரட்டிவிட வேண்டும். எம் மண்ணில் புலிக்கொடியை உயரப் பறக்க விடவேணடும்.' என்ற மாறாத இலட்சியக் கனவுடன்தான் தனது ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொண்டாள்.

சிலாபத்துறைத் தாக்குதல் தேனுஜாவை ஒரு சிறந்த போராளியாக, சிறந்த வீராங்கனையாக இந்த உலகுக்கு வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் இவள் தன்கையில் காயமடைந்தாள்.

ஆனையிறவுச் சமரின்போதும் இவள் தன்னுடைய முழுத் திறமைகளையும் வெளிக்காட்டியிருந்தாள். எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதுவதிலிருந்து, களத்தில் காயப்பட்ட வீரர்களை விரைவாக இடம் மாற்றுவது, களத்தில் நின்று போராடிக்கொண்டிருக்கும் போராளிகளுக்குத் தேவையான வெடி பொருட்கள், உணவு, நீர் போன்றவற்றை வழங்குவது என்று எல்லா முனைகளிலும் பாய்ந்தோடி நின்றாள்.

தொடர்ந்து மணலாற்றில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போதும் தேனுஜாவின் பங்கு மறக்கமுடியாதது. அடர்ந்த காட்டுக்குள் தளம்பாத உறுதியுடனும் வீரத்துடனும் நின்று போராடினாள். இந்தச் சண்டையின் போது அவளது வயிற்றில் பெரிய காயம் ஏற்பட்டது.

இவளது, ஆற்றலும், அருமையும், வீரமும், துணிவும் மகளிர் படையணிக்கென்றொரு தனித்த விசேட வேவுப் பிரிவை உருவாக்குகின்ற அளவுக்கு வளர்த்துச் சென்றன. விசேட வேவுப் பிரிவின் பொறுப்பை ஏற்ற தேனுஜா இரவு, பகல் பாராது உழைத்தாள்.

எப்படியேனும் மகளிர் படையணி தானே முழுமையான போர்த் திட்டங்களையும் வகுத்து இராணுவ முகாம் ஒன்றைத் தாக்கி அழிக்க



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ். கல்வித்திணைக்கள மனைப் பொருளியல் பிரிவுடன் இணைந்து உள்ளூர் மூலப்பொருட்களில் இருந்து சிறந்த புதியரக உணவு தயாரித்தலில் போட்டியினை நடாத்தியது. உள்ளூர் உற்பத்திப் பாவனையை ஊக்குவிக்கும் முகமாக இது நடாத்தப்பட்டது.

இதில் பாடசாலை மாணவர்கள், ஆண், பெண் இருபாலாருமான தனிநபர்களும் கலந்துகொண்டனர். மற்றும் மகளிர் அமைப்புக்கள், தனியார் நிறுவனங்களும் கலந்துகொண்டன. போட்டியில் உள்ளூர்ப் பொருட்களைக் கொண்டு சிறந்த உணவுகளைத் தயாரித்தவர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வேண்டும் என்ற இலட்சியக் கனவை இதயத்துட் தேக்கி வைத்தாள். அதனைச் செயலுருவில் கொண்டுவரவேண்டும் என்று துடித்தாள்.

இயக்கச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் பலவேகய 2 நடவடிக்கையின்போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவளின் திறமையை வியந்து நின்றனர்.

"நாங்கள் எந்த இடத்துக்குப் போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா. எப்படி இவவால இப்படி நடக்க முடிகிறது? இதுவரை இங்கேயே நிண்ட எங்களுக்குக்கூடத் தெரியாத இடமெல்லாம் இந்தப்பிள்ளைக்குத் தெரிந்திருக்குது" என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

ஆம், இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில் வல்லவளாகிய இவள் இந்தச்சண்டையின் போது எல்லோருக்கும் வழிகாட்டியாக நின்றாள்.

சிட்டுப்போல பறந்து திரிந்து எதிரியின் அசைவை அவதானித்து நின்றாள். நாம் எல்லோரும் 'எதிரி எங்கே... எங்கே?' என்று அவன் வரவைத் தேடி நிற்க, இவளோ எதிரியின் பக்கத்தில் நின்று கொண்டே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டாள். விடுதலைக்காக அவள் எதையும் செய்யத் தயாராக இருந்தாள்.

ஒருமுறை வேவு பார்க்கப் போனவள் திடீரென்று வோக்கியில் அறிவிக்கிறாள் "ஆர்.பி.ஜீயோடை உடனே வாங்கோ." என்று. மறுகணம் "வேண்டாம், நானே நேரில் வருகிறன்" என்று அறிவித்தாள்.

எங்களுக்கு விளங்கவில்லை.

நேரில் சொன்னபோது தேனுஜா சொன்னாள், "அக்கா, எங்கடை இடத்திலை எதிரி வந்து குசாலாகத் திரியிறதைப் பார்த்தவுடன் எனக்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டன். பிறகுதான் நான் போன வேலையை யோசிச்சன். எனது தவறு விளங்கிச்சு. அதுதான் அப்படி அறிவிச்சனான்." என்றாள்.

எதிரியைக் கண்ணால் கண்டும், அவன் குசாலாகத் திரிவதைக் கண்டும் இவள் ஏன் தன்னை அடக்கிக் கொண்டாள்.

எங்கள் மண்ணில் எதிரியின் பாதப் பதிவுகூட இருக்கக் கூடாது என்பதற்காக நிதானத்துடன் திட்டங்களை வரைந்து கொண்டிருந்தவள் இந்த வேங்கை. இதனால்தான் அவள் தனது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

இன்னொருநாள் வேவு பார்க்கப் போனவள் வந்து சொன்னாள், "அக்கா, அந்தப் பொயின்ரிலை இரண்டு டொங்கான் இருக்கு. எப்படியும் நான்தான் அதை அடித்து எடுப்பன். இரண்டு டொங்கானையும் எடுத்து அண்ணாட்டைக் கொடுத்து எங்களுக்கு M203 (எம்203) ஒன்று வாங்குவன்." என்றாள்.

எத்தனையோ ஆயிரம் கற்பனைகளைத் தனது இதயத்திற் தேக்கி எங்கள் தேனுஜா செயற்பட்டாள். சண்டை தொடங்கிய நாளில் இருந்து தன்னைப் பற்றி அவள் பொருட்படுத்தியது கிடையாது. பதினைந்து நாளாகக் குளிக்கக் கூட இல்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவளது முழுக்கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது. "எப்படியும் இவங்களை அடிச்சுத் துரத்திப் போட்டுத்தான் நான் குளிப்பன்." என்று கூறிக் கொண்டே வேகங் கொண்டெழுந்தாள்.

தமிழீழத் தாகத்தை மட்டுமே தன் நெஞ்சில் தேக்கி வளர்த்த எங்கள் தேனுஜா தன் இலக்கை நோக்கிய பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள். எல்லோர் இதயங்களிலும் இலட்சியக் கனவை வளர்த்துவிட்டு இவள் எமக்கு வழிகாட்டிச் சென்றுவிட்டாள்.

ஈழக்கனவுகள் சுமந்தவள் நினைவுகள் இன்று எங்கள் இதயங்களை ஆக்கிரமித்துள்ளன. அவள் பாதச் சுவடுகளில் எங்கள் பாதச் சுவடுகளை இன்னும் ஆழமாகப் பதிக்கின்றோம்.

விடியலைக் காணும்வரை இந்த வேங்கைகளின் பயணம் ஓயாது.

**- புதியவள் -**


**தேனுஜா**

இவள் உறுதியும் துணிச்சலும் மிகுந்தவள். தனக்கு கொடுக்கப்பட்ட வேலையின் தன்மையைப் புரிந்து செயற்படக்கூடிய திடகாத்திரமான உள்ளம் படைத்தவள். எதிரியின் நிலைகளை அண்மித்து, எந்தவித பதட்டமும் இன்றி வேவு பார்த்து, மிகவும் துல்லியமாக விளங்கும் ஆற்றல் படைத்தவள். எதிரியின் எல்லையிலேயே இவள் என்றும் நின்றாள். இவளின் இழப்பை எம்மால் ஈடுசெய்துகொள்ளவே முடியாது.

**- தளபதி பால்ராஜ் -**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆசைகள்

அழகிழந்த இயற்கை
உயிரிழந்த உடல்
உருக்குலைந்த தேசம்
சிதைகளின் நடுவே
சிதையாத ஆசைகள்
பெற்றதாயின் மடியில்
தலைசாய்த்திட
தவழ்ந்த மண்ணின்
புழுதியைச் சுவாசித்திட
பொங்கிவரும் கடலலையில்
கால் நனைத்திட
ஆற்றுமணலில் கால்புதைய
வேகவேகமாய் நடந்திட
மாதுளையின் பூக்கள் உதிர்ந்திட
துள்ளி ஓடும் அணிற்பிள்ளைகளை
மணிக்கணக்காய் ரசித்திட
செவ்விளநீரைச் சீவி
முகம் நனைத்திட
நுங்கின் கண்களை ருசித்திட
புற்களில் ஓய்வெடுக்கும்
பனித் துளிகளில் முகம் பார்த்திட
கொட்டும் மழையில்
முழுவதுமாய் நனைந்திட
கூவிச் சென்றிடும் இரயிலுடன்
கூடவே ஓடிட
மாலைப் பொழுதில் பட்டம் ஏற்றிட
பனைவடலிக்குள் ஆதவன்
அஸ்தமிக்க
மஞ்சள் சிவப்பாய்
வானமகள் நாணிட
வெள்ளி நிலாவில்
ஔவையைக் கண்டிட
மின்மினிகளும் விண்மீன்களும்
வானையும் பூமியையும் இணைத்திட
நிலாச்சோறு சமைத்திடும்
தங்கையுடன் சண்டையிட
பாட்டியின் அரவணைப்பில்
தாத்தாவின் கதைகேட்டு
சுகமாய் துயில் கொள்ள
யுகம் யுகமாய் முகிழ்த்திட்ட
ஆசைகள் நிதர்சனமாகிட
எமக்கிங்கு நிரந்தரமாய்
சுதந்திரம் வேண்டும்.

- இரா. அன்பரசி -

www.tamilarangam.net

# திரைகடல் ஓடினோம் திரவியம் தேடியல்ல...

எம் தமிழீழப் போராட்டத்திற்கு தேவையான ஆயுதங்களோ அல்லது உபகரணங்களோ, போக்குவரத்தோ, இவை எல்லாமே கடல் மார்க்கமாகவே நடைபெற்று வருகின்றன என்பது நாம் அறிந்த உண்மை.

எத்தனையோ சொல்ல முடியாத இன்னல்களுக்கு மத்தியில் விசைப்படகைச் செலுத்தி நம் விடுதலைப் போராட்டம் வளர்ச்சி அடைய ஊன்றுகோலாக இருந்தவர்களைப் பற்றிச் சில நிமிடம் சிந்திப்போம்.

விசைப்படகைச் சாதுரியமாகச் செலுத்துவதற்கு நன்கு பயிற்சி பெற்றவர்களாலேயே மட்டும் முடியும். இவர்களை நாம் “ஓட்டிகள்” என்று அழைப்பது வழக்கம். ஆரம்ப காலகட்டங்களில் மிக இலகுவாகவே எமது விசைப்படகுகள் சென்று வந்தன; கொண்டுவந்தன. ஆனால் எம்முடைய பொருட்கள், ஆயுதத்தளபாடங்கள் கடல் மார்க்கமாகத்தான் கொண்டுவரப்படுகின்றன என்பதை நன்கு அறிந்த சிறிலங்கா அரசு தன் கடல் வலயத்தை அதிகரிக்கத் தொடங்கியது. அந்த அதிகரிப்பானது இப்போது “டோரா” எனும் இஸ்ரேல் விசைப்படகு வரை வந்திருக்கின்றது. நானும் சிலதடவைகள் எம்முடைய விசைப்படகிலே சென்று வந்திருக்கின்றேன். உண்மையிலே அது ஒரு திகில் அனுபவம் தான். 85ம் ஆண்டு முடியுமட்டும் கடலிலே இடையிலே நேவிக்காரருடைய படகைக் கண்டால் அவர்களைவிட வேகமாக ஓடுவது, தப்புவது வழக்கமாக இருந்தது. அப்படி எத்தனையோ தடவைகள் எம்முடைய படகுகள் திரும்பி வந்திருக்கின்றன.

அதன் பின் 86களில் நவீன விசைப்படகுகளில் எம்படகுகளை துரத்தத் தொடங்கினர். அவற்றிடம் இருந்து மீள்வது மிகக்கடினமாகவே இருந்தது. எம்முடைய 3 படகுகள் நேவிப் படையினரால் ஆழ்கடலிலே மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. எம்முடைய முதற்படகு மூழ்கடிக்கப்பட்டபின் பலவிசைப்படகுகள் கடலிலே நேவியால் மூழ்கடிக்கப்பட்டன.

ஆனால் எம்முடைய ஓட்டிகள், அந்த தியாக தீபங்கள், வீரமறவர்கள், கடல் வேங்கைகள் இப்படிச் சொல்வதால் மட்டும் அவர்களுக்கு மதிப்பளித்துவிட முடியாது என்பது எமக்குத் தெரியும்.

அவர்கள், தாம் செல்கின்ற பயணத்தின் ஆபத்தை அறிந்தவர்கள், புரிந்தும் போனவர்கள்; போயும்விட்டார்கள். இன்றும் தமிழீழம் காண்பதற்காக பயணம் செய்யத்தான் போகின்றார்கள்.

இன்று எம் கைகளிலே மின்னிக்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு ஆயுதமும் இன்று எமக்கு வெற்றியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற அந்தப் பொருட்களும் அவர்களால் எமக்கு எடுத்துக் கொண்டுவரப்பட்டவையே. எனவே எம்முடைய துப்பாக்கிகள் அனைத்தும் சிரம் தாழ்த்தி அவர்களை வணங்குகின்றன.

86ல் எத்தனையோ தடவைகள் ஏன் ஒவ்வொரு தடவையும் என்றுகூடச் சொல்லலாம். நேவிப்படகால் துரத்தப்பட்டு, அவர்களோடு சமர் புரிந்து மீண்டு வந்தார்கள். அவர்களுடைய ஒவ்வொரு பயணமும் மரணத்தை எதிர்நோக்கியதாகவே இருந்தது. நேவி கண்டால் கலைப்பான், கலைத்தால் அடிபாடு. சிலவேளை தப்பலாம். அல்லது மூழ்கடிக்கப்படலாம். தரையிலே சண்டை போடுவதுபோல் அவ்வளவு இலகுவானதல்ல கடற்சண்டை. ஒளிக்க முடியாது; மறைப்புகளிடையே மறைந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. எம்மைத் துரத்தி வரும் பெரிய விசைப்படகு அதிலிருந்து குண்டுகளை கக்கும் பாரிய துப்பாக்கிகள். அலையில் எகிறலால் மேலே தூக்கித்தூக்கி வீசப்படும் எமது படகு, எத்தனை இன்னல்களையும் ஒவ்வொரு தடவையும் சந்தித்தும் கலங்காதவர்கள். உயிரைத் துச்சமென மதித்தவர்கள். இவர்களின் வாழ்க்கை சாவுக்குப் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு ஈனப்பிறப்புக்கும் ஓர் எடுத்துக் காட்டு. ■

**கிட்டண்ணாவால் எழுதப்பட்ட ‘திரைகடல் ஓடினோம் திரவியம் தேடியல்ல’ என்னும் கட்டுரையின் ஒரு பகுதியை இங்கே பிரசுரித்துள்ளோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



க. பார்த்திபன்

# வன்னி வளநாட்டின் பண்பாட்டுக் கோலங்கள்

**வன்னியின் பூர்வீக மொழி தமிழ்.... பண்பாட்டு விழுமியங்கள் தமிழர்களுக்கே உரித்தான அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கியனவாகவே காணப்படுகின்றன.**

**வ**டக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தெற்காக அகன்று பரந்து காணப்படும் நிலப்பரப்பே வன்னி எனப்படுகின்றது. இது வடக்கே யாழ். மாவட்டத்தையும், கிழக்கே இந்துமா கடலையும், தெற்கே அநுராதபுரம், தென்மேற்கே புத்தளத்தையும் மேற்கே இந்துமா கடலையும் எல்லைகளாகக் கொண்டு வன்னி வரையறை செய்யப்படுகிறது. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா என நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. வன்னிப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பிரதான தொழிலாக நெல் வேளாண்மை, உப உணவுப் பயிர் உற்பத்தி, காட்டுத் தொழில், மீன்பிடித் தொழில், கால்நடை, விவசாயம், சிறு கைத்தொழில் முயற்சிகள் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளைக் கூறலாம். எனினும் இக் கட்டுரையானது வன்னியின் பண்பாட்டு விழுமியங்களையும், அவை அண்மைக் காலத்தில் சிதைவடையும் போக்குகளையும் ஆய்வு செய்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

“வன்னி நாடு வளர்சோலை நாடு
வாரியம் மூன்றும் விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர் சோலை நாடு
காராளர் வாழும் கன்னியர் நாடு.”

இப்பாடலானது பழம் பாடற் தொகுதியில் வன்னியின் பெருமையினைக் கூறும் பாடலாக உள்ளது. இவ் வன்னிப் பிரதேசமானது பூர்வீகம், மொழி, இனம், பண்பாடு என்பவற்றில் தனிச் சிறப்பு வாய்ந்தது. கோணேசர் காலக் கல்வெட்டு ஒன்றில் வன்னிபம் என்னும் பெருமை மிக்க பட்டம் குளக்கோட்ட மன்னனால் வழங்கப் பட்டதாக அறியப்படுகின்றது.

***

“வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள் இன்றைய கால கட்டங்களில் பெருமளவிற்கு சிதைவடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்குப் பல்வேறு காரணிகள்.....”

***

அதுமட்டுமல்லாமல், தென்னிந்தியப் படையெடுப்புக்கள், குடியேற்றங்கள் என்பவற்றிற்கும் வன்னிப் பிரதேசத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. ‘கல்லாடம்’, ‘சிலை எழுபது’, ‘வன்னியர் புராணம்’, ‘வன்னியர் குல நாடகம்’, ‘வன்னியர் குலக் கலியாணக் கொத்து’ என்னும் நூல்கள் வன்னியரின் தோற்றம் பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. இந்நூல் ஆதாரங்களின்படி வன்னி என்பது இன்றைய வரையறைக்கும் அப்பாற்பட்டு திருமலை, மட்டக்களப்பு ஆகிய கிழக்குப் பிரதேசங்களையும் உள்ளடக்குவதாகவே உள்ளது. இது மட்டக்களப்பு மான்மியத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. பேராசிரியர் சி.பத்மநாதனால் ஆய்வு செய்யப்பட்டு, உறுதி செய்யப்பட்ட வரலாற்று உண்மைகளில் வன்னி பற்றிய ஆய்வுகளும் முக்கியம் பெறுகின்றன.

முள்ளியவளை
நடா ரங்கநாதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருப்பினும், வன்னி என்னும்பொது பண்டாரவன்னியனும், அவன் காலமும் இப்பிரதேசத்தின் வரலாற்றில் அழியாத இடம் பெற்றுள்ளன என்றால் அது அதிகம் தவறில்லை. வன்னியை ஆண்ட மன்னர்களுள் குலசேகரன் வைரமுத்து பண்டார வன்னியன் என்னும் தமிழ் மன்னன் இப்பிரதேசத்தின் பூர்வீகம், பாரம்பரியம், வீரம், பொருளாதாரம் என்பவற்றின் பாதுகாவலனாக இருந்துள்ளான்.

ஆரம்பத்தில் இருந்து இப்பிரதேசங்களில் திராவிடர் குடியிருப்புக்கள் அமைந்தபோது இங்கே வன்னியர்கள்தான் பூர்வீகக் குடியிருப்பாளர்களாக இருந்தனர் எனச் சோழர்காலக் கல்வெட்டுக்களில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. "குவேறஸ்" சுவாமியாரின் கருத்துக்களும் இதனை வலியுறுத்துவனவாகவே உள்ளன.

வன்னியின் பூர்வீக மொழி தமிழ். (இவர்களின் பூர்வீகக் கலாச்சாரம், பண்பாடு என்பனவும் தமிழரின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவையாகவே காணப்படுகின்றன.) சோழர் காலத்தில் அநுராதபுரத்தில் கட்டப்பட்ட சிவன் கோவில், அக்காலத்தில் கட்டப்பட்ட பனங்காமம் சிவன் கோவில், முல்லைத்தீவு குமாரபுரத்தில் அமைந்துள்ள முருகன் கோவில் (இவ்வாலயம் கர்ண பரம்பரைக் கதைகளுடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது) என்பவற்றின் வரலாறுகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் இனம் தனித்துவமான பண்பாட்டினைக் கொண்டிருந்தது தெளிவாகின்றது. தனித் தமிழ் இனமாகவும், பூர்வீகக் குடியிருப்புக்கள் தமிழர் குடியிருப்புக்களாகவும் காணப்படுவதால், அந்நியர் இப்பிரதேசத்தைக் கைப்பற்றும் வரை தனிப் பெரும் பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசமாகவே காணப்பட்டது.

## பண்பாட்டு விழுமியங்கள்:

பண்பாட்டு விழுமியங்கள் என்பது விழுமியங்கள் என்னும் வகையில் எல்லா இன மக்களும் ஏற்புடைத்தான விடயமாக இருந்தாலும், பண்பாட்டு அடிப்படையில் தமிழர் பாரம்பரியக் கலை, கலாச்சாரம் எனபற்றிற்கூடாக தமிழர்களுக்கு எனத் தனித் தனிப் பெரும் பாரம்பரியமும், கலாச்சாரமும், இந்த இனம் தோன்றிய காலம் தொட்டே உருவானவையாகக் காணப்படுகின்றன. இதனால் தமிழர்களுக்கான பண்பாட்டு விழுமியங்களின் கன பரிமாணம் மிகச் சிறப்பு வாய்ந்ததுவும், பழைமை வாய்ந்ததுவுமாகும்.

வன்னியின் பண்பாட்டு விழுமியங்கள், அவை தமிழர்களுக்கே உரித்தான அனைத்து முத்திரைகளையும் உள்ளடக்கியனவாகவே காணப்படுகின்றன.

"வளமிகுந்த வன்னிநாடு வாங்க எங்குது
வாழும் வழி காட்டுகிறேன் நான் வாங்க எங்குது
எழவு விழுந்த அடிமை வாழ்வை அழுது தொலைத்து விட்டு
ஏறுபோல் நிமிர்ந்து பார்த்து வீட்டுக்கு வாங்க"

என்னும் முத்துக் கவிஞர் ஒருவரின் கவிதையில் இருந்து வன்னியின் பண்பாட்டுக் கோலத்தினை நாம் காணலாம். வன்னிப் பிரதேசத்தின் பெரும் பகுதி கிராமப் புறங்களாகும். இக்கிராமங்கள் பெருமளவுக்குத் தமது பண்பாட்டு விடயங்களில் உறுதியாகவே இருப்பவை. வீட்டுக்கு வந்தாரை வரவேற்று உபசரித்தல், தமிழ் மொழியைப் பிற மொழிக் கலப்பின்றித் தமிழாகவே பாவித்தல், முதியோரைக் கனம் பண்ணுதல், மத அநுட்டானங்களிலும், கோவில் வழிபாட்டிலும் நம்பிக்கையும், கொண்டாட்டமும், உற்றார் உறவினர் அயலவரோடு நட்பும், திருமணக் கொண்டாட்டங்களில் தமிழர் பாரம்பரியம், பண்பாடு என்பவற்றை முழுமையாகப் பின்பற்றல், மரணச் சடங்கில் கிரியைகளும், இழவு கொண்டாடலும், விழாக்கள், பண்டிகைகள் என்பவற்றை பண்பாட்டின் அடிப்படையிற் கொண்டாடுதல், பாரம்பரியமான விவசாயம், பயிரிடல் முறைகளைப் பேணல், பண்பாடு தழுவிய மரபுக் கவிதைகள், நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், நடனங்கள், கூத்துக்கள் என்பவற்றை ஆடுதல், மேடையேற்றல் என்பன போன்றவை எல்லாம் வன்னியின் பண்பாட்டு விழுமியங்களாகவே காணப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் இன்று இப்பிரதேசத்தில் நம்மோடு முழுமையாக இல்லை எனலாம். ஒரு இனத்தின் தனித்துவம் பேணப்பட வேண்டுமாயின், அந்த இனத்தின் பண்பாடு, கலை என்பன பேணப்படல் அவசியம்.

மிகுதி அடுத்த இதழில்....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்லும் அலைகளும்

- யேசுராசா -

அன்றிரவிற் கொடுமைகள் நிகழ்ந்தன.
எங்களது பெண்கள் குழந்தைகள், முதியோர்
'வேட்டைநாய்களால்' விரட்டப்பட்டனர்.

'கைப்பற்றப்பட்ட பூமியில்
அநியாயப் படைகளாய் அபிநயித்த சக்திகள்'
ஒன்பது உயிரின் அநியாய இழப்பு.
ஓ.....! அன்றிரவிற் கொடுமைகள் நிகழ்ந்தன.

துயர் நிறைந்த நெஞ்சோடும்
மரத்தில்
நாம், ஒரு சின்னமெழுப்பினோம்.
சிந்தப்பட்ட இரத்தத்
துளிகளாய்ச் சிவந்த 'செவ் விரத்தம்பூக்கள்'
நாள்தோறும் சின்னத்தினடியில்
எதையோ எமக்கு உணர்த்திக்கிடக்கும்.

மறுபடியும் இரவில் கொடுமைநிகழ்ந்தது.
செத்த உடலை
ஓநாய்கள் சிதைப்பதாய்,
மரச்சின்னத்தை
'அவர்கள்' அழித்தனர்.
மக்கள் வலியவர்கள்
மறுபடி வெளியிடை
எழுப்பினர் கற்றூண்;
தம் நெஞ்சின் வலிய
நினைவுகள் திரண்டதாய்!

மீண்டும் ஓர்முறை 'காக்கியின் நிழல்'
கவிந்து படிந்தது.
'அதிகாரச்சக்திகள்' கற்றூணை விழுத்தினர்.

அலைகள் ஓய்வதில்லை.
மறுபடியும் மக்கள் எழுப்பினர் சின்னம்:
கல்லுகளில் ஒன்பது, மெழுகு திரிகள்.

மெழுகு திரிகள் குறியீடாய் நின்றன;
தியாகச் சுடரைத்
தம்முள் கொண்டதாய்......

கற்களின் புறத்தில்
மக்கள் தம் சுடுமூச்சு
நாளும் நாளும் பெருகி யேவரும்.
அடக்கு முறைகள் நிகழ நிகழ
உஷ்ணவட்டம் விரிவடைகின்றது.

உஷ்ண வட்டம் நிதமும் தாக்கையில்
கல்லும் உயிருறும், நாட்கள் வரும்;
கல்லும் உயிருறும் நாட்கள் வரும்!


கற்கள் உயிர்த்து சுடரை வீசையில்
அடக்கிய சக்திகள் தப்பமுடியுமா?
அடக்கிய சக்திகள் தப்பமுடியுமா?

சோதிச் சுடரில் தூசிகள் பொசுங்கல்,
நியதி.

கற்கள் உயிர்த்துச் சுடரை வீசையில்
மக்கள் சும்மா படுத்துக்கிடப்பாரா?
கற்கள் உயிர்க்கையில்.... கற்கள் உயிர்க்கையில்..
மக்கள் அலையாய்த் திரண்டே எழுவர்!

மக்கள் அலையாய்த் திரண்டு எழுகையில்
பொசுங்கிய தூசுச் சாம்பல்கள் யாவும்
அந்த அலையிற் கரைந்து போகும்!
அந்த அலையிற் கரைந்து போகும்!

www.tamilarangam.net



# பரிதியைத் தொட உயர்ந்த கைகள்

அலை எழுந்து
மலை தொட முயலும்
வங்கக் கடலில் எங்களின்
தங்கத் தமிழ் கரைந்துவிட்டதாம்!

கந்தக நெடி
காற்றெங்கும்
நிறைந்திருக்கும் எங்களின்
தேசத்துக்கு
சந்தணமாய் மணம் தந்த
சந்தணத் தேர்
எரிந்துவிட்டதாம்.....!

நாளெல்லாம்
பொழுதெல்லாம் நம்
தமிழ் குஞ்சுகளுக்காய் நல்ல
நாடொன்று சமைக்க
போர்நடை பயின்றவன் இன்று
ஆர்ப்பரிக்கும் ஆழ் கடலின்
ஆழத்தில் நீள்துயிலிலா....?

இது முடிவல்ல
உன்னுடையது முடிவல்ல நண்பனே.

இமய வரம்பில்
எடுத்த கல் பற்றி
கதைபேசிக் கதைபேசி
கண் மூடித் துயில் கொண்டிருந்த
தமிழ் மானிடத்தை தலை
நிமிர உழைத்தவனே....

பரிதியைக் கூட
தொட எழுந்தனவே உன்
கைகள்.
அவை ஓய்ந்துவிட்டனவா....?

இது முடிவல்ல
உன்னுடைய மரணம்
முடிவல்ல....!
முடிவு உண்டுதான்.
முடிவு சாதாரண மானிடத்துக்கு
முடிவானதுதான்.
முகமெல்லாம் வரிவிழுந்து
முதுகோடு கூன் விழுந்து
மூச்சடைத்து
கண்மூடித் துடிப்படங்குவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது முடிவுதான்.

ஆனால்,
"நீயோ மரணம் வாழ்வின்
முடிவல்ல" என்று
முழங்கியவனல்லவா
முடிவேது உனக்கு...
எங்களின்,
நீல வான்வெளியெங்கும்
இரும்புப் பறவைகள்
ஏந்திய குண்டுடன் தமிழ்
இரை தேடி சடசடக்க,
பனையும் பாளையும்
கைகொட்டிச் சிரித்து
விளையாடும் எங்களின்
செம்மண் பூமியெங்கும்
குழி தோண்டி
கொடும் எதிரி
குறிவைத்து படுத்திருக்க,

திசை தோறும் சிங்கள
சினைப்பர்கள் தலை தேடி
நீண்டிருக்க,
முன்னோக்கி அடிவைக்கும்
காலின் கீழ்
கண்ணி வெடி
துயில் கொள்ள,
மரணத்தை காலில் போட்டு
மிதித்து
தாயகம் மீட்டிட
நெருப்புப் பாதைகளில்
பயணப்பட்டவனே!
எங்களின் தளபதியே!

அன்று,
வன்னிக் காட்டுள்
வஞ்சகத்தால் வீழ்ந்த
ஜொனி.
பின்
வன்னிக் காடெங்கும்
கண்ணி வயலாய் மாறி
ஆக்கிரமிப்புக் கால் பதித்த
வரலாறு நம் போராட்ட
வரலாறு.

உலகதிர
வெடித்து
நிலத்தடி நீரையும்
சல்லி மண்ணையும்
தூக்கியடிக்கும்
கண்ணிவெடி
அதிர்வுகளில்
நீயிருப்பாய்....!

கை விலங்குகளும்
வளைந்த முதுகெலும்புமே
சொத்துக்களாய் சேர்த்த
சர்வதேசத்து
உரிமையிழந்த
சோதரருடன் நம்
போராட்டம் குலுக்கும்
கைகளுள்
நீ இருப்பாய்!

வானெங்கும்
பூச்சொரியும்
அந்நாளில்...
வானம் நோக்கி
நம் வீரர்
துப்பாக்கி ஆனந்த
தோட்டா துப்பும்
அந்த வசந்த வேளையில்.....
நெஞ்சமெல்லாம்
பூச்சொரியும்
அந்த
விடியல் நாளில்......
திசையெல்லாம்
எழுந்து நின்று
தமிழிசை பாடி
ஏற்றும் நம்
விடுதலைக் கொடியின்
அசைவில் நீ
மீண்டும்
தெரிவாய்.


முத்து
டென்மார்க்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வீடியோப்பட விமர்சனம்

# "தமிழோசை"



'மாவீரரைப் போற்றுதல் என்பது தமிழீழ மக்களின் இரத்தத்துடன் கலந்து விட்ட ஒன்று.' என்ற செய்தியுடன் (ஒலிக்கத்) தொடங்குகின்றது தமிழோசை. படத்தின் ஆரம்பக் காட்சியில் என்ன உணர்வு ஏற்பட்டதோ அதை அப்படியே தக்கவைத்து சுமார் ஒரு மணித்தியாலம் வரை பார்வையாளர்களை ஈர்த்தி ழுத்தது இந்த ஒளிப்பதிவு நாடாப்படம் (Video Film) என்று சொன்னால் 01.01.1993 அன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இருந்த எவரும் இதனை மறுத்துரைக்க மாட்டார்கள். இந்த வகையில் இப்படம் மிகப்பெரிய வெற்றியை ஈட்டி விட்டது.

தென்தமிழீழத்தின் மட்டக்களப்புப் பகுதியில் நடைபெறுவதாகக் கதை அமைந்துள்ளது. அதனைக் கருத்திற் கொண்டு படப்பிடிப்பிற்கான இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பைப் பற்றித் தெரிந்தவர்கள் அனைவருக்கும் கடுக்காவெளியிலோ, வெல்லாவெளியிலோ, சிவத்தப்பாலத்திலோ இருப்பது போன்ற உணர்வேற்படுகின்றது. மற்றவர்களுக்கு "இவ்வளவு அழகானதா எங்கள் தேசம்?" என்று இதயம் ஆனந்தக் கூத்தாடுகின்றது.

இந்த இடங்களைத் தேர்ந்தெடுத்த இயக்குனரையும் அழகாகப் படமாக்கிய படப்பிடிப்பாளரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அதேபோல பாத்திரப் படைப்புக் கேற்ப உடையலங்காரத்தில் மிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ரிக்ஷாக்காரனையும் மடிப்புக் குலையாத வர்ண ஆடைகளுடன் காட்டும் தென்னிந்தியத் திரைப்படங்களிலிருந்து மாறுபட்டு நிற்கிறது.

தனிநபர்களைச் சுற்றியதாக அல்லாமல், உறுதி மிக்க மக்கள் கூட்டத்தினரை கதாநாயகர்களாகக் கொண்டு கதை பின்னப்பட்டுள்ளது. போராட்டம் என்பது அனைவருக்கும் சொந்தமானது என்று முரசறைகிறது இந்தப்படம்.

இப்படத்திற்கு இசையமைத்திருப்பவர் அருணா. இசைத்துறையில் 25 வருடங்கள் அனுபவமிக்கவர்தான் என்பதை நிரூபித்திருக்கிறார் அவர். பாடல்களில் ஜெயா சுகுமார் பாடிய முதலாவது பாடல் ஏனைய பாடலைவிட மிகச்சிறப்பாகவுள்ளது.

நடிப்பினால் இப்படத்திற்கு உயிரூட்டுபவர்கள் என்று ஒருவரை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அது ஒரு நீண்ட பட்டியல். மாவீரர் தினத்தன்று எவருக்கும் தெரியாமல் ஆலயமணியினை ஒலித்துவிட்டு வந்த மகன், தந்தை தன்னைச் சந்தேகப்பட்டதும் "நான் உங்கள் மகன்." என்று துடிப்பது, இதே பாத்திரம் இராணுவத்தால் சுடப்படும் காட்சி, "செத்தவீடு"

**கரும்பறவை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற பதிலைக் கேட்டும் “அதுக்கேன்ரா அழுகிறாங்க?” என்று கேட்டுவிட்டு “பத்தே பத்து நிமிசம் தருவன், அதுக்கிடேல எல்லாத்தையும் காலியாக்கிடோணும்” என்று எச்சரிக்கை செய்யும் தேசத்துரோகி, அரைகுறையாகக் கட்டப்பட்ட பாடையை பீதியுடன் தூக்கியபடி ஓடிவரும் அயலவர்கள், தொடர்ச்சியான இழப்புகளுக்கு போராளிகளே காரணம் என்று குறை கூறும் மனைவியை “உங்கடை ஆக்களைப் போல....'' என்று கோபம் கொள்ளும் கணவன் இதே பாத்திரம் தேசவிரோதி தமது உரையாடலைக் கேட்டுவிட்டானென்றதும் “இல்லைக்கிளி....” என்றபடி சமாளிக்க முயல்வது, கொடூரத்தனத்தை முகத்தில் சுமந்தபடி வரும் இராணுவச்சிப்பாய்கள், மணியடிக்கும் குழந்தை, தனக்கெதிரே நீளும் 'பிஸ்டலை'ப் பார்த்தபடி தொடர்ந்து மணியடிக்கும்போது... அதன் முகபாவம், “அப்பே ரட்ட” என்றபடி வரும் திமிர்பிடித்த இராணுவ அதிகாரி, தொடர்ந்தும் குழந்தை மணியடிக்கும்போது அவரது முகபாவம், இராணுவச் சுற்றிவளைப்பில் அகப்படும் பொதுமக்கள்... இவ்வாறாக அனைவருமே இயக்குனர் எதனை எதிர்பார்த்தாரோ அதனை அப்படியே கொண்டு வந்திருக்கின்றார்கள். எனினும் இதேயளவு சிறப்பை ஆரம்பத்தில் தனது வீட்டைப் பார்க்கவரும் பொதுமகனை இராணுவத்தினர் தாக்கும் காட்சியில் காணமுடியவில்லை. அதில் செயற்கைத்தனம் உள்ளது. எனினும் அதனைத் தொடர்ந்து அந்தக் கொடூரமுகம் தலையசைப்பதும், கால் வெட்டப்படுவதும் மிகத் தத்ரூபமாகவுள்ளது. இரத்தத்தை உறையவைக்கும் காட்சி இது. தனது மாமனுக்கு தேசவிரோதி



இயக்குனர் தலைவர் பிரபாகரனிடம் பரிசு பெறுகிறார்.

அடிக்கும் காட்சியும் சிறப்பாக வுள்ளது.

ஆரம்பத்தில் சுவரொட்டியை ஒட்டியது நான்தான் என்று கூறும் நடிகரிடம் இயல்பான நடிப்பைக் காணமுடியவில்லை. பிரபலமான தென்னிந்திய நடிகரொருவரின் பாதிப்பை அவரில் உணர முடிகிறது. ஏனையவர்களிடம் தனித்துவமான நடிப்பைக் காண்பதால் இதில் நிறைவில்லாத மாதிரி எமக்கு உணர்வேற்பட்டிருக்கலாம். சிலகாட்சிகளின் உரையாடல்களில் இயல்புக்கு மாறான இடைவெளியை உணரமுடிகின்றது. இந்த ஒளிப்பதிவு நாடா இயக்குனரின் முதல் அனுபவமாகையால் இது மிகச்சிறிய விடயமே.

அத்துடன் மட்டக்களப்புத் தமிழின் இனிமையை முழுமையாக இதில் உணர முடியவில்லை. அந்தப்பிரதேசத்தில் பிறந்து, வாழ்ந்த கலைஞர்கள் நடித்திருந்தால் இதில் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். எனினும் அந்தப் பேச்சு வழக்கை மிகக் கூடியளவுக்கு கொண்டு வர முயன்றிருக்கின்றார்கள்.

தென்தமிழீழத்தின் அவலங்களைத் தத்ரூபமாகத் தெரிவிக்கின்றது இப்படம். இவ்வளவு அவலத்திற்குள்ளும் நிமிர்ந்து நிற்கும் பாத்திரங்கள் ''நீங்கள் இதுவரை என்ன செய்துவிட்டீர்கள்?'' என்ற கேள்வியை எம்முள் எழுப்புகின்றன. மனச்சாட்சியுள்ள எவரையும் பாதிக்கக்கூடிய படம் இது.

மொத்தத்தில் தான் சொல்ல நினைத்த கருத்தை அழுத்தந்திருத்தமாக தெரிவிப்பதில் வெற்றி கண்டிருக்கிறார் நெறியாளர். கடலைக் கொட்டை சாப்பிட்டுக் கொண்டோ, தேனீர் குடித்துக் கொண்டோ பார்க்கும் விதத்தில் இப்படம் அமையவில்லை. மாவீரர் சுடரேந்தியபடி நிற்கும் பொதுமக்கள், அவர்களை இராணுவ ஜீப்கடந்து வருவது, இக்காட்சியில் இந்தத் தேசமக்கள் என்பதற்காக நிமிர்ந்து கொள்கிறோம். இந்திய இராணுவத்தின் காலத்தில் தேசத்துரோகிகளின் அச்சுறுத்தல்களின் மத்தியில் அன்னை பூபதியின் இறுதி ஊர்வலம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றிய செய்தியையும் இது நினைவுபடுத்துகிறது. அரங்கிலிருந்து வந்து வெகுநேரம் வரை இந்தப்படம் ஏற்படுத்திய உணர்விலிருந்து விடுபடமுடியவில்லை. இதுவே இந்தப்படத்தின் வெற்றி. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

### "எரிமலை" ஆசிரியர் அவர்கட்கு!

எரிமலைபோல் தமிழீழத்தின் உள்ளக் குமுறல்களை, வீரகாவியங்களை, மற்றும் பல அம்சங்களைத் தாங்கி வெளிவரும் "எரிமலைக்கு" எனது நன்றிகள்.

அநேகமாக எல்லா "எரிமலைகளையும்'' இயன்றளவு வாசிக்கின்றேன், வியப்படைகின்றேன். ஏனெனில் இவ்விதழின் எழுத்தோட்டம் என்னை தமிழீழத்திற்கு நேரடியாக இழுத்துச் சென்று விடுகின்றது. "எரிமலையின்" பணி தொடர எரிமலை ஆசிரியர்கட்கு எனது வாழ்த்துக்கள்.

**"எரிமலை" அபிமானி, த.சிவதரன்**

---

### அன்புடையீர், வணக்கம்.

தங்கள் "எரிமலை" மாத சஞ்சிகையை வாசித்துவரும் ஏராளமான தமிழ் மக்களில் நானும் ஒருவன். எமது தமிழ் மக்கள் மத்தியில் குறுகிய காலப்பகுதியிலே பெருமதிப்புப் பெற்றுள்ள தங்கள் சஞ்சிகையானது பற்பல சிறப்பான அம்சங்களுடனும், எமது உணர்வுகளின் ஆழம் வரை ஊடுருவிச் செல்லக்கூடிய உயிர்த்துடிப்புள்ள ஆக்கங்களையும் சுமந்து கொண்டு வெளிவருவது மிகவும் வரவேற்புக்குரியதாகும்.

அன்னைபூமியிலிருந்து எவ்வளவு தூரம் நான் அந்நியப்பட்டுப் போயிருக்கின்றேன் என்பதை ஒவ்வொரு மாத சஞ்சிகையிலும் ஏதாவது ஒரு ஆக்கமாவது எனக்கு நினைவுபடுத்திப் போகின்றது.

அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்வுகளை கவிதைகளிலே சரித்திரமாக்கிவிடும் தமிழீழத்துக் கவிஞர்களின் கவிதைகள் ஆழம் செறிந்தவையாகவும், அற்புதமாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.




மேலும் தங்கள் இதழானது அதிக பக்கங்களுடனும் சிறப்பான அம்சங்களுடனும் வெளிவரவேண்டும் என்பதே எனது அவா.

**எழுச்சி பெற்றெழவைக்கும்**
**எரிமலையே!**
**என்றும் நீ**
**எனக்கு வேண்டும்!**

**அன்புடன்**
**எழுச்சியூட்டும் எரிமலை வாசகன்**
**ஆறுகால் மடத்தூர்**
**ப. காண்டீபன், பாரிஸ்.**

---

### அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

செந்தமிழ் மொழியின் சீரிய புலமை நிறைந்த அறிஞர்கள் பலர் நம் ஈழமணித் திருநாட்டில் அன்றும் வாழ்ந்தனர். இன்றும் வாழ்கின்றனர். இவர்களுடைய அயராத உழைப்பினாலும், அளப்பரிய சேவையினாலும் நம் தமிழ் மொழி சீரும், சிறப்பும் பெற்று விளங்குகின்றது. இவர்களுடன்....

மேலேயுள்ள முகவுரை 20 வருடங்களுக்கு முன்வந்த ஏழாம் தரத் தமிழ் மொழியின் பாடத்தில் ஓர் புலவரைப்பற்றிய முகவுரையாகும். தங்கள் இதழைப் படிக்கும் போது மேலுள்ள வரிகள் என் மனக்கண்முன் தோன்றிவிட்டன. எரிமலை இதழ் இன்னும் வளர்வுற வேண்டும்.

**இளையசகோதரன்**
**ஜேர்மனி.**

---

எம் மண்ணின் நிகழ்வுகளைத் தாங்கி எழும் எரிமலையே, உன்னாலே விழிப்படைந்த பல பேரில் நானும் ஒருவன். தரத்தில், வடிவமைப்பில், உள்ளடக்கத்தில் அனைத்து அம்சங்களிலும் சிறப்புடைய தாய், உலகத் தமிழினத்தின் உயிர் ஏடாய் வலம் வரும் எரிமலையே, புலம் பெயர்ந்த மக்களின் வாழ் நிலைகளையும் உனது ஏட்டில் பதித்திட விளைகிறேன்.

**புவி. பாரிஸ்.**

---

### அன்பு சார்ந்த எரிமலை ஆசிரியருக்கு,

தமிழ் இனத்தின் தலைமகனாகப் பிறந்தவர் பெரியார். அதன் பின் தமிழ் இனம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்று தன் வாழ்வை அர்ப்பணித்தவர் அண்ணா. அதன் வழி, ஆரியரின் எடுபாட்டுக்கும் கலாச்சாரங்களுக்கும், தமிழ் மொழியும் தமிழ் இனமும் அழிந்துவிடக்கூடாது என்று தமிழ் இனத்தின் காவலனாக எங்களின் உடன்பிறப்பு அண்ணா பிரபாகரன் வந்துள்ளார். அன்பான உடன் பிறப்புக்களே, எங்கள் இனத்திற்கு விடுதலை கிடைக்க எல்லோரும் ஒன்று சேருங்கள்.

**மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு**
**வாழ்ந்த எம் மறவேந்தர்**
**பூனைகள் அல்லர்; அவர் வழிவந்தோர்**
**புலிநிகர் தமிழ் மாந்தர்.**

**புங்கையூர் சோமு.**
**ஜேர்மனி.**

---

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புரட்சிக் கல்வியின் அவசியம்

எமது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் கூடவே எமது கல்வி முறையும் மாற்றத்திற்கு உள்ளாகவேண்டியது அவசியமாகின்றது. தமிழர்களின் தேசிய வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்தும் இலக்கில், எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் எமது கல்வி சீரமைக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

ஆங்கிலேயர்கள் தமது காலனித்துவ நலன்களைப் பேணுவதற்காக அறிமுகப்படுத்திய கல்விமுறையின் எச்ச சொச்சங்களே இப்போது நடைமுறையில் உள்ள கல்வித் திட்டங்களில் பெரும்பகுதியாகும். அவற்றோடு சிங்களப் பேரினவாதிகளின் கருத்தாதிக்கத்தைத் திணிக்கும் திட்டங்களும் சேர்க்கப்பட்டு, தமிழர்களின் தேசிய நலன்களையும், தேவைகளையும் முற்றாகப் புறக்கணிக்கும் ஒரு கல்வி முறையே இதுகாலவரை தமிழ்ப் பகுதிகளில் செயற்பட்டு வருவதை நோக்கலாம்.

சுதந்திரத்திற்காகப் போராடும் நாம் எங்கள் எதிர்கால வாழ்விற்கு எதனை நம்பியிருக்கிறோம்? எங்கள் தாயக தேசத்தின் வளங்களும், எமது மக்களின் மனித வளங்களுமே எங்களின், எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வும் வளமும் சீரும் சிறப்புமாகும்.

"தனித்துவமான பொருளாதார சுதந்திரத்திற்காக தனித்துவமான கல்விமுறை வேண்டும்" என துணைவேந்தர் அ. துரைராசா கூறிய கருத்து இங்கு ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டியதாகும். எங்கள் தேசத்தின் வளங்களை தக்கவாறு பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சி கண்டால் மட்டுமே அரசியல் சுதந்திரமும், ஏனைய சமூக மேம்பாடுகளும் சாத்தியமாக முடியும். இந்த வகையில் சகல துறைகளிலுமான வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உதவும் கல்வி முறையினைத் தோற்றுவிக்க வேண்டியது எமது தமிழ்க் கல்விமான்களின் வரலாற்றுக் கடமையாகின்றது.

அத்துடன் புதிய கல்விமுறையானது எமது தேசிய இன தனித்துவத்தை, மகத்துவத்தை, பெருமையை, சிறப்பை மாணவர் மனதில் பதிக்கவும், அவற்றை அவர்கள் பேணி மேலோங்கச் செய்யவும் தூண்டவேண்டும். அத்தோடு, நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு ஈடுகொடுத்து எமது தேசிய பொருளாதார வர்த்தக நலன்களை மேம்படுத்தச் செய்யவும், எங்கள் எதிர்கால பிரஜைகளின் வாழ்க்கை வசதிகளையும், வளங்களையும் சிறப்பிக்க வகை செய்யக் கூடியதாகவும் அமைந்து காணப்படல் அவசியமாகின்றது.

தமிழர்கள் எழுச்சி பெற்ற இனமாக, விழிப்புணர்வு கொண்ட சமூகமாக விளங்குவதற்கு கல்வியே மூலாதாரமானது. ஆகையால் போராட்ட காலமான இப்போதும் சரி, விடுதலை பெற்ற இனமாக மாறிய பின்னரும் சரி கல்வியின் முக்கியத்துவம் எமது தமிழ்ச் சமூகத்தால் நன்கு உணரப்படவேண்டும்.

## வீதியோர மின் விளக்கில் கல்வி கற்கும் மாணவர்

வீதியோர மின் ஒளியில் அமர்ந்து பாடசாலை மாணவர்கள் சிலர் கல்வி கற்றதை சில தினங்களாக அவதானிக்க முடிகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ். போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தி, அதனை வேறுபடுத்திக் காட்டுவதற்காக, அதன் மூலைகளில் சிலுவை அடையாளத்தில் மின் விளக்குகளை இரவில் ஒளிரவிட்டுள்ளது.

இந்த மின் ஒளியில் அமர்ந்து சில இரவுகளில் மாணவர்கள் கல்வி கற்கிறதை நேரில் காணமுடிந்தது. இவர்கள் மரக்கொப்புகளிலும் வர்த்தக நிலைய விறாந்தைகளிலும் வீதி ஓரத்திலும் அமர்ந்திருந்து பாடவிதானங்களை மீட்டுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

யாழ். மணிக்கூட்டுக் கோபுரம், ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள மின் விளக்குகளுக்குக் கீழ் அமர்ந்திருந்து கற்ற மாணவர்களை அணுகி நமது நிருபர் வினவியபோது தாம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருப்பதாகக் கூறினார். மேலும், வருமானம் அதிகரிக்காத நிலையில் பொருள்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளதாகவும், மண்ணெண்ணெய் விலை நாளுக்குநாள் அதிகரித்து செல்வதாகவும், அதனை நுகரும் சக்தியை தாம் இழந்துவிட்டதாகவும் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரங்களை நடுதலும் பாதுகாத்தலும்

மரங்கள் பல பயன்களை பலன் கருதாது தருகின்றன. பல பயன்களைத் தரும் மரங்களை நடுதலும் பாது காத்தலும் முக்கியத்துவ மானதாகவே இருக்கின்றது.


மரங்கள் மனிதனுடைய வாழ்க்கையோடு ஒன்றித்து நிற்கின்றன. மேலும் காபன் தன்மயமாக்கல் மூலம் வளியிலுள்ள கரியமிலவாயுவை ($CO_2$) நீக்கி பிராணவாயுவை ($O_2$) கூட்டுகின்ற தன்மை உடையன. மழைபொழிய வகை செய்கின்றது; நிழல் தருகின்றது; வளமான மண்ணை கடல் அரிக்காமல் காத்து நிற்கின்றது. இயற்கை அழிவுகளில் இருந்தும் மனிதனை காக்கின்றது.

எமது மண்ணின் வணங்கள் எதிரியால் திட்டமிட்டு நாசப்படுத்தப்பட்டு வருகின்றது. இயற்கை அனர்த்தங்களாலும் இராணுவக் கெடிபிடிகளாலும் எமது தேசத்தின் வனங்கள் அருகிக்கொண்டே செல்கின்றன. இவ்வாறு வனங்கள் அருகிச் செல்லும் பெரும் ஆபத்திலிருந்து எமது மண்ணின் எதிர் காலச் சந்ததியை காக்கும் எண்ணத்தோடு தமிழீழ பொருண்மீய மேம்பாட்டுக் கழகத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவினர் இயங்கி வருகின்றனர்.




தேவையற்ற முறையில் மரங்களை தறிப்பது, விறகுத்தேவைக்காக மரங்களை வெட்டுவது போன்ற காரியங்களை வெகுவாகக் குறைத்து மரங்களை தறிப்பதால் ஏற்படும் சூழல் பாதிப்புப் பற்றிய விளக்கங்களையும் விறகுச் சிக்கனங்களை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது பற்றிய அறிவுரைகளையும் அளித்து வருகின்றது. பல திட்டங்களைத் தீட்டி வனநாடே வளநாடு எனும் வண்ணம் பொருண்மிய மேம்பாட்டுக் கழகமும் மக்களும் செயற்பட்டு வருகின்றார்கள்.

- மாவீரர்கால மரநடுகை
- வீதியோர மரநடுகை, பராமரிப்பு
- கிராமிய காடு வளர்ப்புக்கு முன்னோடித்திட்டம்
- உவர் சவர் நில மரநடுகை
- கடற்கரையோர மரநடுகை
- வல்லைவெளியில் உவர்நில மரநடுகையின் மூலம் சோலை ஒன்றினை உருவாக்கதல்
- முத்தையன்கட்டுப் பகுதியில் கொடிகள், செடிகள், மூலிகைகள், பூமரங்கள்,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பல்வேறு நாட்டு மரங்கள் என பல்வேறு தாவரங்களைக் கொண்ட தாவரவியல் பூங்கா ஒன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பல அரியதிட்டங்களைத் தீட்டி அவற்றை செவ்வனே நடைமுறைப் படுத்தி வருகின்றனர்.

மரங்கள் நிழலையும் சூழலில் அமைதியையும் தருவதோடு இன்றைய போர்க்கால சூழலினால் பாரிய வெடிகுண்டுச் சத்தங்கள் ஏற்படுத்தும் அதிர்வுகளில் இருந்து மனிதனுடைய செவிப்பறையைப் பாதுகாக்கின்றது. விமானம், கடல், தரை தாக்குதல்களில் இருந்தும் மக்களைப் பாதுகாக்கின்றது. எமது போராளிகள், மக்கள் உருமறைப்புச் செய்துகொள்ள உதவுகின்றது. விமானக்குண்டு வீச்சில்ருந்து பாதுகாக்கும் பதுங்கு குழிகளைக்கூட மக்கள் பெரிய மரங்களின் கீழ்தான் அமைக்கின்றார்கள். இவ்வாறு தமது வாழ்க்கையோடு ஒன்றி நிற்கும் மரங்களை நடுதலிலும் பாதுகாத்தலிலும் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள்.

**எமது தேசத்தின் காலநிலைத் தன்மையில் வளரக்கூடிய மா, பலா, வாழை மரங்கள் கரியமிலவாயுவை தன்மயமாக்கல் மூலம் பிராணவாயுவாக மாற்றுவதில் முதலிடம் வகிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.**

* * *

# தமிழீழத்தில் சட்டக்கல்லூரி

**விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நீதி மன்றங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நீதிமன்றங்களில் விசாரணைகளை மேற்கொள்ள எமது போராளிகளிலும் தமிழீழ மாணவர்களிலும் தெரிவு செய்யப்படுபவர்களைக் கொண்டு சட்டக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது.**

**தமிழீத்தில் அரசியல்துறை, இராணுவப்படைத்துறை, காவல்துறைபோன்று நீதி நிர்வாகத்துறையும் எமது தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் செயற்பாடுகளாக தமிழீழத்திற்கான சட்டக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு அதில் இரண்டு வருடம் அவர்களுக்கான வகுப்புக்கள் நடாத்தப்பட்டு இறுதியாக நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கொண்டு சட்டத்துறை அறிஞர்களை உருவாக்கவும் நீதித்துறையைப் பலப்படுத்தவும் முடிவு செய்துள்ளார்கள்.**


**சட்டக்கல்லூரி தொடங்கப்பட்டு பத்து மாதங்களாகின்றது. சட்டக்கல்லூரியில் ஆண்கள் பெண்கள் உட்பட நாற்பது போராளிகள் கல்வி பயில்கின்றனர். ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்டு அதில் பூரண தேர்ச்சிபெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மாதாந்தப் பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் ஆண்டுப் பரீட்சைகள் என்ற அடிப்படையில் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றது. இவர்களுக்கான சட்டக்கல்வியை அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் விரிவுரையாளர்களாக இருந்து கற்பிக்கின்றனர். பாடத்திட்டம் சிறிலங்காவில் இருப்பது போன்றல்லாமல் சில சட்ட அமைப்புக்கள் மாற்றி அமைக்கப்பபட்டுள்ளது. வடபகுதியில் நீண்டகாலமாக நடைமுறையிலுள்ள தேசவழமைச்சட்டம் குற்றவியல் சட்டங்களில் பல மாற்றங்களையும் கொண்டுவர எண்ணி உள்ளனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தியாக தீபம் சீலன்


**1983ம் ஆண்டு ஆடி மாதம் 15ம் திகதி, மாலை மூன்றுமணி கச்சாய் கடலில் இருந்து வீசும் இதமான காற்று. அந்த மீசாலைக் கிராமம் அமைதியில் தோய்ந்து போயிருக்கின்றது.**



படம் (2)


ஒரு துரோகி காட்டிக் கொடுக்கின்றான். அந்த விரோதியால்தான் சூழ்ந்திருந்த அமைதியைக் குலைத்துக் கொண்டு சிறிலங்காவின் இராணுவக் கூலிப்படைகள் அந்தச் சிறிய கிராமத்தைச் சுற்றி வளைக்கின்றன. கச்சாய் வீதியுடன் இணையும் அல்லாரை, மீசாலை வீதியை அரசபடைகளின் வாகனங்கள் ஆக்கிரமிக்கின்றன.

ஒரு மினிபஸ், இரண்டு ஜீப், ஒரு இராணுவ ட்ரக் வண்டி.



படம் (3)

நூறுபேருக்கு மேல் சிவிலுடையணிந்த சிங்கள இராணுவ அதிரடிப்படையினரின் வருகையால் அந்தக் கிராமம் சிலிர்த்துக் கொள்கிறது.



படம் (4)

கல்லும் மணலும் கலந்த குச்சொழுங்கைகளுக்கூடாக நான்கு இளைஞர்கள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் சைக்கிளில் விரைந்துகொண்டிருக்கின்றார்கள். ஒரு துரோகி காட்டிக் கொடுத்ததால் சிங்கள இராணுவம் தங்களது மறைவிடத்தைச் சுற்றிவளைப்பதை உணர்ந்து அந்தக்கிராமத்தை விட்டு வெளியேற விரையும் அந்த நான்கு இளைஞர்களும் அதோ அந்த அல்லாரை மீசாலைத் தார் வீதியை கடந்து கொண்டிருக்கின்றார்கள்.

படம் (5)

அந்த நான்கு இளைஞர்களும் கடந்த ஸ்தலத்தை நோக்கிச் சடுதியாக விரைகின்றனர் இராணுவத்தினர். அந்த ஸ்தலத்தில் இராணுவ வண்டிகள் குலுங்கிக் கொண்டு நிற்கின்றன. இராணுவத்தின் குண்டு துளைக்கும் எல்லைக்குள் அந்த இளைஞர்கள் விரைந்து கொண்டிருக்கின்றார்கள். இராணுவத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னர் பனைவடலிக்குள் பாதுகாப்பான இடங்களில் தங்களை நிலைப்படுத்திக் கொள்கின்றனர். மொத்த இராணுவத்தில் முப்பதுக்கு மேற்பட்டோர் பனைவடலிக்குள் குழுமுகின்றனர். இராணுவ வெறியர்களால் துரத்தப்பட்டு வெறும் பொட்டல் வெளிக்கு வந்த நிலையில், சுற்றிலும் சூழ்ந்து கொண்டுவிட்ட அரசபடைகளை உறுத்துப் பார்க்கிறான் அந்த இளைஞர்களின் தலைவன்; அவன்தான் சீலன். அரச படைகளின் கண்களுக்குள் விரலைவிட்டு ஆட்டிய வீரமறவன்; தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவப் பிரிவுத் தலைவன்.

"சுடுங்கள்"

கட்டளை பிறப்பித்த சீலனின் கையிலிருந்த துப்பாக்கி சடசடக்கின்றது. மற்ற இளைஞர்களும் விரைந்து துப்பாக்கிகளை இயக்குகின்றனர். வெட்ட வெளியில் அந்த வீரமகன் சீலன். அவனுக்கருகில் ஆனந் எனும் அருள்நாதன். உடலும் உள்ளமும் வைரம்பாய்ந்தவன். அவனோடு இன்னொரு வீரன். ஆபத்தின் எல்லைக்கப்பால் அடுத்த வீரன். உறுதி, நிதானம், வேகம், விவேகம், களத்திலே புலிகள். இராணுவக் கூலிப்படை விரைகிறது விடுதலைப் போராளிகளை நோக்கி. வெட்டவெளி; தொடர்ந்து முன்னேறவோ பின்வாங்கவோ முடியாது இக்கட்டான நிலையில் அவர்கள் சிக்கிக் கொண்டு விட்டனர். ஆனாலும் ஆயுதங்களோடு அரசபடைகளின் கையில் சரணடையும் கோழைகள் அல்லர்; வீரர்கள்; அவர்கள் விடுதலைப் புலிகள். இறுதி மூச்சுவரை இந்தப் புலிகள் போரிடத் திடம் கொண்டனர். சுற்றிலும் குவிந்து நிற்கும் கூலிப்பட்டாளம். வெளியைத் துளைக்கும் சன்னங்கள், மண் தரையில் புழுதி கிளப்பும் குண்டுகள். சீலனின் இயந்திரத் துப்பாக்கி தொடர்ந்து சடசடக்கிறது.

## படம் (6)


கூலிப் படையின் துப்பாக்கிச் சன்னங்கள் ஏற்கனவே பெற்றிருந்த வீரத்தழும்புகளைக் கிழித்துக் கொண்டு மார்பில் பாய்கின்றது. இரத்தம் பீறிட சீலன் தள்ளாடுகின்றான். இரண்டு முறை முன்னரே களத்தில் குருதி சிந்திய அந்த வீரன் தன் உயிர் போகவில்லை என்பதை உணர்கிறான். உயிரோடு அகப்பட்டால் கடித்துக் குதறக் காத்திருக்கும் வேட்டை நாய்கள் சுற்றிலும்.


"என்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு நீங்கள் பின்வாங்குங்கள்." என்று சீலன் கட்டளையிடுகிறான். படைத் தலைவனின் கட்டளை.

பணிக்கப்பட்ட வீரனோ திகைத்துப்போய் நிற்கிறான். தொடர்ந்து வேட்டைமழை பொழியும் இராணுவம். சீலனின் கட்டளையை நிறைவேற்றுவதா? ஒரு பாசம் மிக்க தோழன்; ஒரு வீரம் மிக்க போராளியின் மரணம் தன்னால் நிகழ்வதா? அல்லது அவனை உயிருடன் பிடிபடவிடுவதா? தான் பின்வாங்குவதா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







வினாடி யோசித்து விடைகாண வேண்டிய நிர்ப்பந்தம் அவ் வீரனுக்கு.

"என்னைச் சுடடா! சுடு."

சீலனின் கண்டிப்புடன் கூடிய கட்டளை மீண்டும் பிறக்கின்றது.

நெஞ்சில் வழியும் இரத்தம், முகத்தில் துளிர்க்கும் வியர்வை; சீலன் தள்ளாடியவாறு கண்டிப்புடன் மீண்டும் கட்டளையிடுகிறான்.

இலட்சியத் தலைவனாலே புடம்போடப்பட்ட அந்த வீரனின் நெஞ்சிலே உறுதி பிறக்கிறது.

### படம் (7)

கண நேரத்தில் சீலனின் உடலை மீசாலை மண் அணைத்துப் பெருமை தேடிக் கொள்கின்றது.

### படம் (8)

அதற்குள் குறிபார்த்துச் சுடுவதற்கு வாகான வாட்டசாட்டமான தோற்றம் கொண்ட ஆனந்தன் குண்டு பட்டுச் சாய்கிறான். ஆனந்தன் உயர்ந்தவன்; உயரத்தில், தன்மானத்தில், வீரத்தில்...

"என்னையும் சுட்டுவிடு" ஆனந்தனின் வேண்டுகோள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூய்மைக்கு முத்திரை பதிக்கும் இரத்தச் சாட்சிகள். பிரபாகரனின் பயிற்சிக் களத்தில் வளர்ந்த வீரவேங்கைகள். ஆனந்தனின் தன்மானம் காக்கிறான் அந்த இளம்வீரன்.

### படம் (9), (10)

சீலன் முன்னர் துப்பாக்கிப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கும்போது, முதன் முறை நெஞ்சிலே குண்டு பாய்ந்தது. இரத்தம் பீறியடிக்க விழுந்து கிடந்த நிலையிலும் கூட அந்த வீரனின் முகத்தில் புன்சிரிப்பு மிளிர்ந்ததை இயக்கத் தோழர்கள் என்றும் நினைவு கூருவர். மூச்சுவிடவும் திராணியற்றுப் போன நிலையிலும் அவன் திணறித் திணறிச் சொன்ன வார்த்தைகள், "இயக்கத்தைக் காட்டிக் கொடுக்காதீர்கள்." பிறகும் பேசுவதற்கு மூச்சுவிடக் கிடைத்தபோது அவன் சொன்னான். "இயந்திரத் துப்பாக்கியைக் கொண்டுபோய்ப் பாதுகாப்பான இடத்தில் வையுங்கள்." மரண அவஸ்தையிலும் அந்த மாவீரன் இயக்கம் குறித்து மட்டுமே உதிர்த்த வார்த்தைகள், கண்ணீரோடு மட்டுமல்ல பெருமிதத்தோடும் நினைவு கூரத்தக்கது.

சாவுக்கு சவால் விட்ட அந்த வீரனை இறுதியில் சாவு அணைத்தபோதும் அவன் இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கவுமில்லை; இயந்திரத் துபபாக்கியை பாதுகாப்பான இடத்தில் விட்டுவைக்கவும் தவறவில்லை.

சீலன் உயிரோடிருந்ததைவிட அவன் மரணித்தபோதுதான் ஆக்கிரமிப்பு அரசுக்கு பெரும் சவாலாகினான். புரட்சிவீரர்களின் வாழ்க்கை சாவுக்குப் பிறகுதான் ஆரம்பமாகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு வேளைக் கஞ்சி,
உடலைப் போர்த்திட
ஒரு சாண் துண்டு,
இதற்காகத்தான்
உரிமை கேட்கத்
துடிக்கும் இதழ்களைப்
பூட்டுப் போட்டுப்
பூட்டி வைத்திருக்கிறோம்.
பொங்கிடும் உள்ளத்தைப்
பொசுக்கிக் கொண்டிருக்கின்றோம்.
அழுவதற்கும் வலுவில்லை,

ஆனால்
உயிரணுவின்
இறுதி இயக்கம்வரை
உடலை
உருக்கியே ஆகவேண்டும்.
ஆம்.
நாங்கள்
உணர்வுகளைக் கூட
உறையவைத்துவிட்டு
உதிரத்தை
உரமாக்கிக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னை பூபதியின்
# 5ம் ஆண்டு நினைவாக..



## நெஞ்சில் விடுதலை நெருப்பைச் சுமந்து
## நீதி கேட்டிவள் நிமிர்ந்தாள்
## பஞ்சில் பொறியெனப் பாரதப் படைகளை
## பார்த்து விழிகளைத் திறந்தாள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்